விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்:பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 06 புதன்கிழமை (22.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 277

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மீள்குடியேற்றங்களை கண்காணிக்க கூட்டமைப்பிலிருந்து 7 பேர் நியமனம்

## புலிகளின் தடையை நீக்குமாறு வாதாட வைகோ விடுத்த கோரிக்கை நிராகரிப்பு



(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு வாதாடுவதற்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி விடுத்த கோரிக்கையை இந்திய நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட பயங்கரவாதப் பட்டியலிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் பெயரை அகற்றுமாறு வை.கோ. நீதிமன்றத்தில் (18ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வு குறித்தும் இக் குழு பேசும்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் முன்னர் இடம்பெற்ற சந்திப்பின்போது இணங்கிக் கொள்ளப்பட்டதன்படி குழுவொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிந்துரைத்துள்ளது. ஜனாதிபதிக்கும் தமது கட்சிக்கும் இடையிலான சந்திப்பின்போது இனப்பிரச்சினை தொடர்பிலும் மீள்குடியேற்றம் தொடர்பிலும் இணைந்துசெயற்படுவது என இணக்கம் காணப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் மீள்குடியேற்றம் தொடர்பான கண்காணிப்புக்களுக்கு 7 பேர் கொண்ட குழுவை நியமிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (17ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டியில் 100 வீடுகள்!

(கிளிநொச்சி)

முருகண்டியில் தென்பகுதி மக்களை குடியேற்றுவதற்கென சுமார் 100 வீடுகள் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டு அவை பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன.

முருகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு எதிரே உள்ள காட்டுப்பகுதியில் இவ் வீட்டுத் திட்டம் அமைக்கப்பட்டு வருவதாகவும் அப்பகுதிக்குள் செல்ல எவருக்கும் அனுமதி வழங்கப்பட வில்லை எனவும் கூறப்பட்டது.

இவ் வீட்டுத்திட்டத்துக்கென புதிய வீதி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அது இன்னமும் ஏ-9 (18ஆம் பக்கம் பார்க்க)

## பொதிகளில் உள்ள விலைகளிலேயே பொருட்களை விற்பனை செய்ய வேண்டும்

### யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வர்த்தகர்கள் நுகர்வுப் பொருட்களில் பொறிக்கப்பட்ட விலைகளிலேயே விற்பனை செய்ய வேண்டும் என யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

அத்துடன் சகல வர்த்தக நிலையங்களிலும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்த வேண்டும் எனவும் யாழ்ப்பாண வணிகர் கழகம் கேட்டுள்ளது.

யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் நேற்று மாலை 4 மணிக்கு நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அதன் நிர்வாகத்தினர் மேற்கண்டவாறு அறிவித்துள்ளனர்.

இதில் யாழ்ப்பாண வணிகர் கழகத்தலைவர் இ.ஜெயசேகரம், செயலாளர் எஸ்.ஜனக்குமார், உபதலைவர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், உபசெயலாளர் சிவகுமாரன் ஆகியோர் கலந்து (18ஆம் பக்கம் பார்க்க)



## ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்!

(கொழும்பு)

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் எதிர்வரும் 9,10 மற்றும் 11ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி ஆணைக்குழு கொழும்பிலும் அதன் பின்னர் கடந்த 18,19 மற்றும் 20ஆம் திகதிகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் தனது விசாரணைகளை மேற்கொண்டது.

இதில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்டனர். இந் நிலையில் எதிர்வரும் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் இக் குழுவினர் மூன்று நாட்கள் தங்கியிருந்து தமது சாட்சிகளின் கருத்துக்களை பதிவு செய்யவுள்ளனர். (ச-5)

## கிளி., முல்லை மாவட்டங்களின் விசாரணை அறிக்கைகள் தயார்!

### ஜனாதிபதி திரும்பியதும் சமர்ப்பிக்க ஏற்பாடு

(கொழும்பு)

கிளிநொச்சியில் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக் குழுவினால் மேற்கொண்டுள்ள விசாரணை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி ஆணைக் குழுவினால் கடந்த 18,19ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி நகரம், கண்டாவளை மற்றும் பூநகரியிலும் 20ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் விசாரணைகள் நடைபெற்றன. இதில் பலர் தமது சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்டனர். (18ஆம் பக்கம் பார்க்க)

Obtain International recognized IT certification courses in Jaffna now!

CCENT - Cisco Certified Entry Networking Technician (Batch-1 starts on 24th september)

SCJP - Sun Certified Java Programmer (Batch-1 starts on 25th september)

CCNA - Cisco Certified Network Associate

AIMS (ACADEMIC INSTITUTE OF MODERN SYSTEMS)

383/14 Temple Road, Nallur. 021 222 1553

Register yourself now!

Full practical oriented courses. Lectures will be contacted in English+தமிழ் medium. well qualified (MSC,BIT-Hons,SCJP,CCNA, CEH) lecturer will be contacting the lectures

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



மக்கள் வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு ஒரு தொகுதி பிளாஸ்ரிக் குப்பைத் தொட்டிகள் நேற்றுக் கையளிக்கப்பட்டன. இந் நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரமுகர்கள் போதனா வைத்தியாலைப் பணியாளருடன் கலந்துரையாடுவதையும் பிளாஸ்ரிக் குப்பைத் தொட்டிகளை பணிப்பாளர் வைத்தியகலாநிதி பவானி பசுபதிராஜாவிடம் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன் கையளிப்பதையும் அருகில் உதவிப் பிராந்திய முகாமையாளரான கே.சுசீந்திரன், என். நாகேஸ்வரன், உதவி முகாமையாளர் பி.உதயன் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தன், போதனா வைத்தியசாலையின் கணக்காளர் மு.விஜயரகுநாதன் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் வவுனியாவில் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் நாளையும் நாளை மறுதினமும் வவுனியா வட மாகாண முதல்நிலை அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் நாளையும் நாளை மறுதினமும் வடக்கு மாகாண முதல்நிலை அலுவலகத்தில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெறும்.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு உட்பட்ட சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் வலயக் கல்வி அலுவலக கணக்காளர்களும் திட்டப்பணிப்பாளர்களும் முதன்மை இணைப்பாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

எனவே மேற்குறிப்பிட்ட அனைவரும் நாளை காலை 9.30 மணிக்கு வவுனியா வடக்கு மாகாண முதல்நிலை அலுவலகத்திற்குச் சமுகமளிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பதிவாளர் என். உமாகாந் அறிவித்துள்ளார்.

முதன்முறையாக மற்றும் மீள் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் விண்ணப்பப்படிவங்களை நிறுவன நிர்வாகக் காரியாலயத்தில் பெற்று எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (ச)

## மண்டைதீவில் இன்று கடையிற் சுவாமி குருபூசை

(யாழ்ப்பாணம்)

கடையிற்சுவாமிகள் குருபூசை இன்று நண்பகல் அவர் வாழ்ந்த மண்டைதீவில் இடம்பெறும்.

மண்டைதீவிலுள்ள அவரின் வாழ்விடத்தில் இடம்பெறும் குருபூசையில் அபிஷேக ஆராதனையும் இடம்பெற்று மகேஸ்வர பூசையும் நடைபெறும். (ந)

# பங்குச் சந்தை குறித்து கருத்தரங்கு

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் ஏற்பாட்டில் பங்குச்சந்தை முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் கருத்தரங்கு இன்று காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணிவரை யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் இடம்பெறும். இக்கருத்தரங்கில்,நீண்டகால நிதித்திட்டமிடல்களின் முக்கியத்துவம் ,பங்குச் சந்தைக்கான அறிமுகம் ,பங்குச்சந்தை முதலீட்டு நடைமுறைகளும் பங்குத்தரகர்களின் பங்களிப்புக்களும் மற்றும் நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வும் பிரயோகமும் என்பன குறித்து கருத்துரைகளும் இடம்பெறும். (ச)


A/L க்குப் பின் என்ன?

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காவிட்டால் என்ன செய்வது?

பரந்து கிடக்கும் உயர் கல்வி வாய்ப்புகளுக்கும் தொழில்வாய்ப்புகளுக்கும் வழிகாட்டும்

துறைசார் வல்லுநர்களின் ஆலோசனைகளுடன் கூடிய

இலவசக் கருத்தரங்கு!



செப். 26 ஞாயிறு

காலை 9 மணி: நெல்லியடி மத்திய கல்லூரி

மாலை 3 மணி: யாழ் மத்திய கல்லூரி

பெற்றோர்களும் பங்குபெறலாம்

ஒரு வழி மூடினால்.... திறக்கிறது ஆயிரம் வழி !

முதலில் பதிவுசெய்வோருக்கே முன்னுரிமை

தொலைபேசி இல : 021 300 8060

இளையோர் சுயமுன்னேற்ற புத்தக கண்காட்சி மற்றும் விற்பனை

(சி/1260)

சிகரம் ஊடக இல்லம்

கல்வி தொழில் வழிகாட்டல் பிரிவு

MEDIA இல., 221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்



மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

20.08.2010 முதல் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.

பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள் ,வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை , வாதநோய், தலையிடி ,பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம் ,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற் படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந் தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ஞரிஸ் இன்

392, மணிக்கூட்டு கோபுர வீதி,

யாழ்ப்பாணம்.

(C-1254)



செல்லா சினிமா

09.09.2010 முதல்



மம்முட்டி அர்ஜுன் சினேகா மற்றும் பலர் நடிப்பில்

ரம்ழான் பெருநாளை முன்னிட்டு இந்திய இலங்கை ஒரேதின வெளியீடு

வந்தே மாதரம்

அக்ஷன் காட்சிகள் நிறைந்த படம்

D.இமான் ஹென்றி அரவிந்த்.T.

பாடல்கள் : வைரமுத்து, நந்தலாலா, சினேகன், விவேகா.

காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00



கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின்

ஆசிரியை

திருமதி வி.சாந்தகுமார்

அவர்களின் பாசமிகு தந்தை

சுப்பிரமணியம் செல்லத்துரை

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும்

அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த

அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரது

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்

யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்.

(2518)



நவீன் தொழில்நுட்பத்துடன் கூடிய

பத்திரிகை | தொலைக்காட்சி | வானொலி | இணையம்

ஊடகக் கல்வி

IT ORIENTED JOURNALISM COURSE

ஊடகத்துறை நுட்பங்களில் சிறந்த தேர்ச்சி பெறுவதற்கான உலகத்தரம் வாய்ந்த முழுமையான செயன்முறைக் கற்கைநெறி

2வது அணி ஆரம்பம்!

➤ விரிவான கையேடுகள் ➤ நூலக வசதி

➤ கணினி – இணைய ஆய்வுகூடம்

➤ Audio – Video Lab ➤ Basic Photography

- குறைந்தபட்சத் தகைமை: தமிழ் மொழியில் "C" யுடன் கூடிய க.பொ.த. சாதாரணதர சித்தி
- கற்கைநெறிக் காலம்: 3 மாதம்

பயிற்சிக் காலத்தில் பகுதி நேர வேலைவாய்ப்பு

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின (IFJ) அங்கீகாரம் பெற்ற பயிற்சியாளரினால் நடத்தப்படும்

சுயவிபரக் கோவை, நீங்கள் இந்தக் கற்கைநெறியைத் தொடர விரும்பும் காரணத்தை விளக்கும் சிறு ஆக்கம் என்பவற்றை, 27-09-2010 திங்களுக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

கற்கைநெறி தொடர்பான விளக்கக் கருத்தரங்கு

பதிவுகளுக்கு: 021 300 80 60

செப். 26ஞாயிறு

காலை 10 மணி: நெல்லியடி மத்திய கல்லூரி

மாலை 3.30 : யாழ் மத்திய கல்லூரி

சகரம் தொடு

இளையோர் மாதாந்தம்

1ம் அணி மாணவர்களின்

யாழ்ப்பாணம் இன்று

www.JaffnaToday.com

அங்குரார்ப்பனமும், சான்றிதழ் வழங்கலும்

ஒக்.2. சனி. மாலை 3 மணி - யாழ் மத்திய கல்லூரி

அனைவரும் வாரீர்!

Sikaram Media House

Centre for Media Studies and Research

இல.221. பலாலி வீதி, கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

SikaramMedia@gmail.com

(சி/1259)

# இன்று ஒரு தகவல்

## மனச்சோர்வு

"வரவர என்மீதே எனக்கு நம்பிக்கையில்லை சேர்" என்றார் ஒருத்தர்.

இப்படிச் சொன்னதும் அவர் ஒரு வேதாந்தியாக ஆகிவிட்டார் போல இருக்கிறது என்று நாம் நினைத்துக் கொள்ளக் கூடாது.

அவர் இப்படிச் சொல்கிறார் என்றால் அவருக்கு தன்னம்பிக்கை குறைய ஆரம்பித்திருக்கிறது என்று அர்த்தம். இது மிகவும் ஆபத்தான விடயம். அதை அப்படியே விட்டுவிடக் கூடாது. உடனடியாக தீர்வு காண வேண்டும்.

இன்றைக்கு பலபேர் உற்சாகமில்லாமல் காணப்படுகிறார்கள். எதைப் பார்த்தாலும் அலுப்பாக இருக்கிறது. அயர்வாக இருக்கிறது என்று சொல்வார்கள். அவர்களுடைய மனம் சோர்வடைந்து விடும்.

மனச் சோர்வு தீர்வதற்கு மருந்தென்ன? அதைத்தான் இன்றைக்குச் சொல்லப் போகிறேன்.

"நல்ல துணிமணிகள் தன்னம்பிக்கையை அதிகரிக்க உதவுகின்றன" என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

அதனால் முடிந்தளவுக்கு உடைகளை தேர்வுசெய்து நல்ல விதமாக உடுத்திக் கொள்ள வேண்டும்.

அடுத்து நிறைய விடயங்களை தெரிந்து கொள்ள வேண்டும். இது தன்னம்பிக்கையை வளர்க்கும் என்று ஆராய்ச்சிகள் மூலமாக நிரூபணமாகியுள்ளது.

ஒவ்வொரு நாளும் புதிதாக ஒருவிடயத்தை தெரிந்து கொள்ள வேண்டுமென்று சபதம் எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்னொரு முக்கியமான விடயம்!

உங்களை அலட்சியப்படுத்துபவர்களின் பக்கம் தலை வைத்துக் கூடப்படுக்க வேண்டாம்.

உங்களை யாராவது மட்டம் தட்டுகிறார்களா? உங்களுடைய மனம் சோர்ந்து போவது போல் யாராவது நடந்து கொள்கிறார்களா?

அவர்களையெல்லாம் உதறித் தள்ளுங்கள் இரக்கமே காட்டாதீர்கள். எல்லோரும் ஒரே மாதிரித்தான் இந்த உலகத்தில் பிறந்திருக்கிறோம். அதனால் அலட்சியப்படுத்துபவர்களை மனதார அலட்சியப்படுத்திப் பாருங்கள். அதற்குப்பின் நீங்கள் தான் ராஜா.

உங்களுக்குப் பிடிக்காத விடயம் ஏதாவது உங்களிடம் இருக்கிறதா? உடனே ஒதுக்கித் தள்ளுங்கள்.

உங்களுடைய எடையைக் குறைக்க வேண்டுமா? உடற்பயிற்சி செய்ய வேண்டுமா? குடிப்பழக்கத்தை உடனே நிறுத்த வேண்டுமா?

எதுவாக இருந்தாலும் உடனே நடவடிக்கை எடுங்கள். ஒத்திப் போடவேண்டாம்.

உங்களை வேதனைப்படுத்தும் விடயம் ஏதாவது இருந்தாலும் அதைப் பற்றிப் பேசுவதை உடனே நிறுத்துங்கள்.

உங்களுக்கென்று ஒரு தனித்தன்மை ஏதாவது இருக்கும். அது எதுவென்று புரிந்து கொண்டு முழுமனதையும் அதன் மீது செலுத்துங்கள்.

உங்களுக்கென்று ஏதாவதொரு சிறப்பம்சம் இருக்கும்.

அழகான கண் , கருங்கூந்தல், நீளமான விரல், இலேசான புன்னகை, நுட்பமான புத்திசாலித்தனம் இப்படி ஏதாவது இருக்கும்.

அதை மொதுவாக கண்டுபிடிக்க வேண்டும். அதை சிறப்பாக வெளிப்படுத்த வேண்டும். எப்பொழுதாவது மனம் சோர்ந்து போனால் உங்களுடைய தனித்தன்மையில் மனதைச் செலுத்தங்கள் சரியாகிவிடும்.

மிகவும் கட்டுப்பாடாக மிகவும் ஆர்ப்பாட்டமாக இருப்பவர்கள் உள்ளூர குமைந்து கொண்டிருப்பார்கள்.

ஒரு இரகசியம் சொல்கிறேன் கேட்டுக் கொள்ளுங்கள் உங்களைச் சுற்றியிருப்போரெல்லாம் மிகவும் 'தன்னம்பிக்கை' உள்ளவர்கள் என்று நினைத்து விடாதீர்கள். உள்ளுக்குள் உதறலடித்தாலும் வெளியில் நடித்துக் கொண்டிருப்பார்கள்.

அச்சம் தேவை தான். ஆனால் அதை வெளியே காட்டிக் கொண்டிருக்கக்கூடாது. மிகவும் அடக்கமாக இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்காதீர்கள். தினமும் ஒரு விடயத்தை நிறைவாக செய்யுங்கள். அது சாதாரண , அற்ப விடயமாக இருந்தால் கூட எடுத்த காரியத்தை சிறப்பாக முடிக்க வேண்டும். அது மனநிறைவைத் தரும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

### விவசாய விலங்கு வேளாண்மை கண்காட்சியில்

## ஸ்தாபிக்கப்பட்ட பயிர்ச் செய்கை துண்டங்களை தொடர்ந்து பார்வையிடுவதற்கு ஏற்பாடு

சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிய சூழல் பாதுகாப்புடனான விவசாய உற்பத்தி என்னும் தொனிப் பொருளில் 18.09.2010 முதல் 20.09.2010 வரை திருநெல்வேலியில் நடைபெற்ற விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி 2010 இற்காக மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பயிர்ச் செய்கைத் துண்டங்களை விவசாயிகள், பண்ணைப் பெண்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தொடர்ந்து பார்வையிடுவதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இதனை பொது விடுமுறை தினமுட்பட காலை 8 மணி முதல் மாலை 5.30 மணி வரை பயிர்ச்செய்கைத் துண்டங்களையும் காட்சிப் பொருட்களையும் பார்வையிடலாம் எனவும் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) சி.சிவகுமார் அறிவித்துள்ளார்.

அத்துடன் விவசாயத் திணைக்களத்திற்குரிய ஆளணி வளத்தைக் கருத்திற் கொண்டு ஒவ்வொருமணி நேர இடைவெளியில் வருகைதரும் பார்வையாளர்களை சிறு குழுக்களாக அழைத்துக் சென்று பயிர்ச் செய்கைத் துண்டங்களையும் காட்சிப் பொருட்களையும் காண்பித்து உரிய விளக்கங்களை வழங்குவதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## புனித வேளாங்கன்னி அன்னையின் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள புனித வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னையின் நவநாள் கொடியேற்றத்துடன் நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு குணமாக்கலும் நற்கருணை வழிபாடும் இடம்பெறவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு திருநாள் திருப்பலியும் அன்னையின் ஆசீர்வாதமும் நடைபெறுமென ஆன்மகுருவும் நலன் விரும்பிகளும் அறியத்தருகின்றனர். (ஸ்ரீ-2)

## நவோதய வார இறுதிநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் நவோதய வார இறுதி நாள் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய L மண்டபத்தில் பிரதி அதிபர் அ.அரியரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண நவோதய இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான கு.செல்வம் , வடமராட்சி வலய கணித பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் க.ம.ஈஸ்வரதேவன் , வடமராட்சி வலய விஞ்ஞான பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ரோ.கருணேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ-4)

★ ★ ★ ★ ★

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் நவோதயா வார நிறைவு நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு அழகரட்ணம் மண்டபத்தில் அதிபர் திருமதி வே. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் நவோதய திட்ட இணைப்பாளருமான இ. தமிழ்மாறன் , சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியை பண்டிதை திருமதி தனலக்சுமி மகாலிங்கம் கலந்து கொள்ளவுள்ளதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ-4)

## இராசி பலன்

*22.09.2010*
*(புரட்டாதி 6, புதன்கிழமை)*
*சதுர்த்தசி பிற்பகல் 1.08 மணிவரை*
*சதயம் காலை 7.40 மணிவரை*
*இராகுகாலம் 12.02-1.32 மணிவரை*
*சுபநேரம் 4.32-6.02 மணிவரை*
*கடையிற்சுவாமி குருபூசை, சித்தாமிர்தம்.*

**மேடம்** இலாபம் இருமடங்காகும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அஞ்சல் வழியில் ஆச்சரியமான செய்தியொன்று வந்து சேரலாம், விருந்துபசாரத்தில் கலந்து கொள்வீர்கள்.

**இடபம்** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்து கொள்ளும் நாள், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, அரசு வழிச் சலுகை கிடைப்பதற்கான அறிகுறி தோன்றும்.

**மிதுனம்** மாற்று கருத்துடையோர் மனம் மாறுவர், கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பம் அகலும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பூர்வீகச் சொத்து தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும்.

**கடகம்** உதவுவதாகச் சொன்ன உறவினர் உங்களை விட்டு விலகுவர், வாழ்க்கைத் துணை வழியே சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், வாகனங்களில் செல்வதில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**சிங்கம்** சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பால் உள்ளம் மகிழும் நாள், கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், மனதிற்கு இனிய செய்தி வந்து சேரும் நாள்.

**கன்னி** எதிரிகள் உதிரியாகும் நாள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் இணக்கத்துடன் நடந்து கொள்வர், நிலையான வருமானத்திற்கு வழிவகை கிடைக்கும்.

**துலாம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புதிய தொழில் தொங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை செலுத்துவீர்கள்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கும் நாள், இல்லத்தில் மங்கள ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், சொத்துவாங்கும் முயற்சிக்கு வித்திடுவீர்கள்.

**தனுசு** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் அடையும் நாள், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், வழக்குகளில் வெற்றி கிட்டும், பயணங்களால் நன்மையுண்டு.

**மகரம்** தொலைபேசித்தகவல் தொழில் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரியும், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம், நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்** கோயில் வழிபாட்டில் குதூகலம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, மறக்க முடியாத சம்பவம் ஒன்று நடைபெறலாம்.

**மீனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன் பாதிக் கப்படலாம், வரம் தரும் தெய்வங் களை வழிபடச் செல்ல வேண்டிய நாள்.

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 70 |
| தக்காளி | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 70 | 60 |
| கரட் | 80 | 40 | 80 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 50 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | -- | 80 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 70 |
| பயற்றங்காய் | 60 | 40 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 30 | 20 | 30 |
| கறிமிளகாய் | 60 | 40 | 60 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 80 |
| போஞ்சி | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 70 |
| கீரை - 1 பிடி | 25 | 20 | 25 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-40 | 30 |

# தேசிய கல்வியியற் கல்லூரியில் சித்தியடைந்தோருக்கு நியமனம் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு

( யாழ்ப்பாணம் )

தேசிய கல்வியியற் கல்லூரியில் சித்தியடைந்தோருக்கு நியமனம் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 27,28 ஆம் திகதிகளில் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் நடை பெறவுள்ளது.

இதில் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் தங்களுக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்ட ஆவணங்களின் போட்டோப் பிரதிகளை அதில் குறிப்பிடப்பட்ட ஒழுங்கில் ஒரு கோவையில் இட்டுக் கொண்டு வரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் குறித்த திகதிகளில் வவுனியா மேலதிக மாகாணக் கல்வித் திணைக்கள பணிமனைக்கு வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு:

**யாழ்ப்பாண மாவட்டம்**

**கணித பாடம்**

சி.கார்த்திகா ( கரவெட்டி ), எஸ்.ஆர். கீதவாணி ( அல்வாய் ), இ.சிவப்பிரியா (கரவெட்டி), ச. ரஜிதா ( யாழ்ப்பாணம் ), இ.சிந்துஜா ( அல்வாய் ), இ.துஷாந்தன் (புலோலி ), பா.மீனலோசினி ( நல்லூர் ), பி.நிரஞ்சனி ( கரவெட்டி ), க.உமாப்பிரியா (யாழ்ப்பாணம்), ச.கஜந்தன் (சாவகச்சேரி), ந.பிரதீபன் ( வல்வெட்டித்துறை ), சி.தாட்சாயணி ( சுன்னாகம் ), கு.தாரணி (கொக்குவில் ), த.நிஷாந்தன் ( புத்தூர் ), சி.வித்தகன் (வட்டுக்கோட்டை), சு. பகீரதன் (ஏழாலை ), சி.சிவகுமார் ( யாழ்ப்பாண்ம் ), சி.அருணகிரிநாதன் (யாழ்ப்பாணம்), சிமித் இன்பநாதன் (உரும்பிராய்), ஐ.வசந்ததாசன் ( அச்சுவேலி ), ந.கமலாசினி ( கரவெட்டி ), பா.சுஜந்தன் (இளவாலை),

**சித்திரம்**

ஆ.செந்தூரன் (மல்லாகம்), யோ.ஜுன் ஜுவிதா ( யாழ்ப்பாணம் ), த.ஜெனனி (மானிப்பாய்), ப. அஜீவன் (கோண்டாவில்), இ.கிருபாகரன் ( சுழிபுரம் ), நா.விஜயகுமார் (கரவெட்டி),

**சங்கீதம்**

வி. பானுரேகா (இணுவில்), சி. தர்சனா (நீர்வேலி), ந.செல்வதுளசினி (யாழ்ப்பாணம்), ப.வாசுகி ( கொக்குவில் ), ம.ஆன் சாமினி (யாழ்ப்பாணம்), ஜெ.மைதிலி (மானிப்பாய்), சி.ஜீவனா ( கொக்குவில்), ச.காயத்திரி (யாழ்ப்பாணம்), செ.ஜெயமலர் (இளவாலை),

**சமூக விஞ்ஞானம்**

ந. சுனேத்திரா ( கொடிகாகம்), செ.தாட்சாயினி (இணுவில்), க.எழில்வதனன் ( புத்தூர் ), க.கஜேந்திரன் (சுன்னாகம் ), க.சுஜித்திரா (வரணி)

**நாடகமும் அரங்கியலும்**

சு.சுஜாதா (கரவெட்டி), கு.நிலாணி (வரணி), க.சுதானந்தன் (சண்டிலிப்பாய்), இ.நிர்மலா (மானிப்பாய்), செ. அனிஸ்குமாரி (மானிப்பாய்), ம.மயூரதி (சண்டிலிப்பாய்), ச. கஜலட்சுமி (சாவகச்சேரி), ப.பாமினி (சுன்னாகம்), பா.எ.சுஜீபன் ( சுன்னாகம் ), தெ.வசந்தன் ( வேலணை), ச.சுபாஜினி (ஏழாலை)

**ஆரம்பக்கல்வி**

ம.ரம்யா ( பண்டத்தரிப்பு ), சி.நிருசா (வரணி ), தி.வாகினி ( யாழ்ப்பாணம் ), இ.அன்னவாகினி ( பருத்தித்துறை ), மா.தனுசா (வவுனியா), சி.கவிதா (யாழ்ப்பாணம்), இ.கல்பனா (புத்தூர்), ச.சந்திரகாசா (கரவெட்டி), பா.பாலகௌரி (யாழ்ப்பாணம்), ந.சிவலோஜினி (யாழ்ப்பாணம்), இ.டெனிஸ்ரன் (யாழ்ப்பாணம்), ம.யூபிரிகா (யாழ்ப்பாணம்), செ.யசோதன் (கோண்டாவில்), தே.சிந்துஜா (கல்கிசை), ஜே.ஜெரின் நிசானி ( யாழ்ப்பாணம் ), ம:சுபத்திரா ( கொடிகாமம் ), சோ.ரேவதி (சாவகச்சேரி), கி.ஜெனத்மேனன் (வல்வெட்டித்துறை), இ.நிமல் (சாவகச்சேரி), யோ.கிரிசேந்திரா (யாழ்ப்பாணம்), த.சரண்யா (யாழ்ப்பாணம்), இ.சயந்தன்(யாழ்ப்பாணம்), பா.ரேணுகா ( கரவெட்டி ), இ.இந்துஜா (கைதடி), செ.மஞ்சுளா(சுழிபுரம்), த.கஜலட்சுமி (இணுவில்), த.விஜிதா(வல்வெட்டித்துறை), நா.கிருபாலினி (தெல்லிப்பளை), சி.உமாதரன் (உடுப்பிட்டி), ப.யோகராணி (யாழ்ப்பாணம்), ஐ.சிவப்பிரியா (யாழ்ப்பாணம்), ம.பத்மராஜ் (நெடுந்தீவு), பு.சுகந்தா (கோண்டாவில்)

**விவசாயம்**

அ.கியோமர் (நெடுந்தீவு), கி.நீலதயாட்சி (யாழ்ப்பாணம்), சி.யாழினி (மல்லாகம்), ஜீ.காண்டீபன் (வரணி ), க.கானப்பிரியா (சங்கானை), அ.திவ்வியராஜ் (சங்கானை), வி.சுருதிகா(யாழ்ப்பாணம்), க.விசயதீபன் (கரவெட்டி), ச.சுரேஷ்குமார் (சாவகச்சேரி)

**நடனம்**

ந.ரதீபா (பருத்தித்துறை ), நி.மதிவதனி (சங்கானை), பொ.சுபானந்தினி (சங்கானை), பா.ஜெனனி ( மானிப்பாய் ), கு.கஜீதா (கோண்டாவில்), ஜே.சோபிதா (யாழ்ப்பாணம்), கு.கஜேந்தினி ( மானிப்பாய்), கு.சுகீதா (சாவகச்சேரி), இ.ரோகினி (யாழ்ப்பாணம்)

**உடற்கல்வி**

பு. அஸ்வினி (பருத்தித்துறை), வ.ஜோசப்கிலானி (யாழ்ப்பாணம்), மே.பி.ஸ்பாடக்கஸ் (யாழ்ப்பாணம்), சூ.யாழினி (கரவெட்டி), கு.மைதிலி (கரவெட்டி), இ.சுபாஜினி (மானிப்பாய்), ம.மேரி அலோசா (பருத்தித்துறை), ம.மேரி அனுசியா (பருத்தித்துறை)

**கிறிஸ்தவம்**

பு.ஜுன்சி றோக் ( பருத்தித்துறை), யோ.சுதர்சினி (யாழ்ப்பாணம்), வி.அ.சிந்துஜா ( யாழ்ப்பாணம் ), த.கஸ்ரோ (சாவகச்சேரி), பே.நிரோஜினி (சுன்னாகம் ), ச.ப.சசிகரன் (பண்டத்தரிப்பு ), து.மயூரன் ( சுன்னாகம் ), ஸ்.அனெட்சியாமளா (மானிப்பாய்), லோ.யோலின் (யாழ்ப்பாணம்)

**இந்துசமயம்**

ஜெ.ஜெயக்கிருஸ்ணன் (சுன்னாகம்), மா.சதீஸ்வரன் (சாவகச்சேரி), சி.சுதர்சினி (கோப்பாய்), இ.நித்தியகலா (நல்லூர்), து.ஜெயசுமதி (கொடிகாமம்), சி.கிருஷ்ணராசா (கரவெட்டி)

**ஆங்கிலம்**

பா. சிந்துஜா (கொக்குவில்), சி.தேவிகா (வட்டுக்கோட்டை), ம.மயூரி (பருத்தித்துறை), அ.அமிர்தவர்சினி (கொக்குவில்), செ.சங்கரி (புலோலி), ச. கிருத்திகா (சாவகச்சேரி)

**விஞ்ஞானம்**

ப.கிருசாந்தி ( அல்வாய் ), ச.சர்மிலா (யாழ்ப்பாணம் ), அ.அருள்ஜீவரட்ணம் (மானிப்பாய் ), சு.ஜஜீவன் ( இணுவில் ), ப.சுபராஜ் (அளவெட்டி), செ.லோகசுந்தரன் (அராலி), சி. தங்கவடிவேல் (அச்சுவேலி), வா. வினோத் (சுண்டிக்குளி ), ப.ஆரணி (சுண்டிக்குளி),க.கயந்தா (யாழ்ப்பாணம்), அ.நிசாந்தினி (கரவெட்டி), நா.சகீதா (கரவெட்டி), ப.துஸ்யந்தன் (உடுவில்), க.பிருந்தா (அரியாலை)

**நூலக விஞ்ஞானம்**

ச.இந்துஜா (மீசாலை), கா.அரிகரன் (கல்வியங்காடு), தி.ஆயவன் (யாழ்ப்பாணம்), க.ஜெயமாலா(யாழ்ப்பாணம்), அ.தசாயினி (இணுவில்), ம.பிரியா (சுழிபுரம்), வி.ரம்யா (புன்னாலைக்கட்டுவன்), கு.ஜெயந்தினி (சண்டிலிப்பாய்),இ.ஜீன்பிரவீனா(சுன்னாகம்)

**கணிதம்**

சி.ரயிதா(பருத்தித்துறை), பா.அரவிந்தன் (உடுப்பிட்டி), கோ.சிவராசா(தும்பளை), சி.சுஜிதா (சண்டிலிப்பாய்), ச.ஜே.துளசிகாயினி (இணுவில்), சூ.யாழினி(கரவெட்டி), கு.மைதிலி (கரவெட்டி)

**தகவல் தொழில்நுட்பம்**

ம.மதுரா (அச்சுவேலி)

**சித்திரமும் வடிவமைப்பும்**

அ.சங்கீதா (கூழாவடி)

**வவுனியா மாவட்டம்**

**ஆரம்பக் கல்வி**

ச.பிரேமாவதி, ச.சர்மிளா, ச.சசிகலா, சு.தர்சிகா, சு.கோணேஸ்வரன்,ச.அமரசக்தி

**உடற்கல்வி**

ச.சிறி மிதுலா

**இந்து சமயம்**

வ.தனரூபி

யா.அப்துல் ரகுமான் (கணிதம்), து.தர்மிளா (சித்திரம்), ப.திருவருட்செல்வி (உணவுத் தொழில்நுட்பம்), இ.உமாதினி (உணவுத் தொழில்நுட்பம்), து.சர்மிலா(சித்திரம்), ப.உமாதினி (உணவுத்தொழில்நுட்பம்), வே.பவினிதினி (உணவுத் தொழில்நுட்பம்), ச.சுவிதா (உணவுத்தொழில்நுட்பம்), அ.வதனி (சங்கீதம்), ம.கல்பனா (சங்கீதம்), வ.வில்வராஜா (சமூக விஞ்ஞானம்), சு.சங்கரேஸ்வரி (சமூகவிஞ்ஞானம்), தே. செரினிநிலாந்தி(நாடகம்), ஜோ.சர்மிலா (ஆரம்பக்கல்வி), ச.சிவரோகினி (ஆரம்பக்கல்வி), செ.இராமேஸ்வரி (ஆரம்பக் கல்வி), செ.நிசாந்தினி (ஆரம்பக்கல்வி), க.நிரஞ்சிகா(ஆரம்பக்கல்வி), இ.நித்தயா (ஆரம்பக்கல்வி), மை.வோ.கிங்ஸ்லி (ஆரம்பக் கல்வி), வி.சிவதாசன்(விவசாயம்), சூ.சும[illegible]ராஸ் (விவசாயம்), ச.கார்திகா (நடனம்), இ.சற்சொரூபன் (உடற்கல்வி), இ.கிருசாந்தன் (உடற்கல்வி), கா.பவநீதர் (உடற்கல்வி), கீ.சந்திரவதனா (கிறிஸ்தவம்), மொ.மொகமட் முபராக் (இஸ்லாம்), இ.செந்தில்குமரன் (இந்துசமயம்), சி.பார்த்தீபன்(விஞ்ஞானம்), பூ.நித்தியா (நூலகவிஞ்ஞானம்), கு.சிந்துஜா (தகவல் தொழில்நுட்பம்), ந. சுஜானி(தகவல் தொழில் நுட்பம்), அ.புஸ்பலதா (தகவல்தொழில் நுட்பம்), எம்.ஏ.த.ச. குணசேகரா(உடற்கல்வி)

**மன்னார் மாவட்டம்**

ஐ.சுனகபூர்(சித்திரம்),பி.கு.டொன் பொஸ்கா (சமூக விஞ்ஞானம்), ஏ.யோகமலர் (நாடகம்), பி.யூ.கீதபொன்கலன்(நாடகம்), யோ.மேரி டயானாவாஸ் (ஆரம்பக்கல்வி), ச.மேரிரியானா (தமிழ்),சு.சீ.அருணோதயன் குரூஸ் (விவசாயம்), யூ.லீ.கவிதா(விவசாயம்), யோ.றெபெட் அன்ரூஸ் (உடற்கல்வி), சூ.[illegible]பஸ்தியான் (உடற்கல்வி), அ.ஜெகான் பெர்னாண்டோ(உடற்கல்வி), சு.கிருபத்சினி (கிறிஸ்தவம்), லி.க. தாரணிவாஸ்(கிறிஸ்தவம்), சி.டினேஸ்குமார் (இந்துசமயம்), யோ.இ. ராஜ்குமார் (விஞ்ஞானம்), ப.நிரோசர் (தகவல் தொழில்நுட்பம்)

**கிளிநொச்சி மாவட்டம்**

ச.பிறேமாவதி (சமூகவிஞ்ஞானம்), ச.சர்மிலா(ஆரம்பக்கல்வி), ச.சசிகலா (ஆரம்பக்கல்வி), சூ.தர்சினி(ஆரம்பக்கல்வி), சு.கோணேஸ்வரன் (ஆரம்பக்கல்வி), ச.அமரசக்தி (ஆரம்பக்கல்வி), சி.சிறிமிதுனா(உடற்கல்வி), வ.தனரூபி(இந்துசமயம்).

**முல்லைத்தீவு மாவட்டம்**

ஜெ.கஸ்தூரி (இந்துசமயம்), சி.நிசாந் (ஆரம்பக்கல்வி), சோ. ஜெரோசன் (ஆரம்பக்கல்வி), த.றெஜினெற்றா (கிறிஸ்தவம்).


## கண்ணீர் பூக்கள்

முன்னாள் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்
திரு. குட்டிப்பிள்ளை கிட்ணர்( JP) அவர்களின் அன்பு
மனைவியாகிய

**அமரர் திருமதி. கிட்ணர் கனகம்மா B.A(Lond)**

(யா/செங்குந்த இந்துக்கல்லூரி - பழைய மாணவி, ஆசிரியை
உப அதிபர், பதில் அதிபர்)



அவர்களின் மரணச்செய்தி கேட்டு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்வதுடன்
இன்று சிட்னியில் நடைபெற
உள்ள அவரின் இறுதிக்கிரியைகளில்
கலந்து கொள்ள முடியாவிட்டாலும்
எங்கள் குடும்ப உறுப்பினர்களினதும்
செங்குந்த இந்துக்கல்லூரி பழைய
மாணவர் சங்க உறுப்பினர்களினதும்
சார்பில் எமது கண்ணீர்பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

லயன் வ. பரமசிவம்(JP)
குடும்பத்தினரும்

யா/ செங்குந்த இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும்.

(2515)


# பி.ரி.ஐ. பக்ரீயாவை விசிறும் நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)


கியூபாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள பி.ரி.ஐ.பக்ரீயாவை கண்டி மற்றும் கம்பளை உள்ளூராட்சி மன்ற பிரிவுகளில் விசுறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆய்வுரீதியில் பக்ரீயாவை விசிறும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாக மலேரியா மற்றும் டெங்கு நோய் ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சரத்தெனியகே தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகுதி பி.ஐ.ரி.பக்ரீயா அனுராதபுரம் களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை உள்நாட்டில் தயாரிக்கப் பட்ட பக்ரீரியாவை நாட்டில் விசுறும் பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றிகரமாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மருத்துவ ஆய்வு நிறுவகம் மேற்கொண்ட ஆய்வுகளின் அறிக்கை தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மலேரியா மற்றும் டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)



வட்டக்கச்சி சிவிட் சென்ரர் பகுதியில் சர்வதேச மருத்துவ குழுவின் அனுசரணையுடன் சுவிட்சென்ரர் இளங்கதிர் சனசமூக நிலையத்தில் சிறுவர் கழகமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதில் கிளிநொச்சி இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் தந்திரி வத்த மங்கல விளக்கேற்றுவதையும் சர்வ தேச மருத்துவ குழுவின் ஆசிய பிராந்திய சுகாதார ஆலோசகர் செல்வி கேசிகா, சுவிட் சென்ரர் கிராம முன்னேற்ற சங்க தலைவரிடம் விளையாட்டு உப கரணங்கள் வழங்குவதையும் தொடர்ந்து நடைபெற்ற வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்டப்போட்டியில் வீரர்களுக்கு கிளி.இராணுவ பொறுப்பாதிகாரி கைலாகு கொடுப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-வட்டக்கச்சி நிருபர்)

# நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கை நெறி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் நடாத்தப்படும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி தரம்-2 (2010/2011) வகுப்புக்கள் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல் கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இக்கற்கை நெங்றிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு இலங்கை நூலகச் சங்க யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# பரு.சாரதா சேவாச்சிரமத்தால் பல்வேறு உதவிகள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் உள்ள அருட்சகோதரிகள் மாணவர் இல்லத்திற்கு விஜயம் செய்த பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா தண்ணீர் இறைக்கும் இயந்திரம், சி.டி.எம்.ஏ.தொலைபேசி , ஒரு ஜெனரேற்றர், புதிய தையல் இயந்திரம் என்பவற்றை வழங்கியுள்ளார்.

மேலும் வட்டக்கச்சிக்கு விஜயம் செய்த சுவாமி அங்குள்ள ஸ்ரீரங்கநாதப் பெருமான் கோயில் உற்சவத்தில் கலந்து கொண்டு 10 தொண்டர்களுக்கு வேட்டிகள் வழங்கியதோடு அங்கு தொடர்ந்து பணி செய்யவுள்ளதாகவும் கூறினார்.

(ஸ்ரீ-4)

# எழுத்துப் பரீட்சைக்கான திகதிகளில் மாற்றம்

யாழ். மாவட்ட செயலகத்தில் 27,28ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த சாரதி அனுமதிப் பத்திர எழுத்துப் பரீட்சைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் இடம்பெறமாட்டாது எனவும் அவ் எழுத்துப் பரீட்சைகள் யாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஏற்கனவே வழங்கப்பட்ட நேர ஒழுங்கில் நடைபெறும் என யாழ். மாவட்ட செயலக உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

## யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி

(தேசிய பாடசாலை)

**பரிசில் நாள் - 2010**



காலம்:- 24.09.2010 வெள்ளிக்கிழமை
காலை 8.30 மணி
இடம்:- கல்லூரி அருணாசலம் மண்டபம்

**தலைவர்**
திரு. அ. கைலாயப்பிள்ளை
(கல்லூரிமுதல்வர்)

**முதன்மை விருந்தினர்**
திருமிகு. தி. இராசநாயகம் அவர்கள்
(பிரதிப்பிரதம செயலாளர்- வடக்குமாகாணம்)

**சிறப்பு விருந்தினர்**
திருமிகு. யோ. ஜெயக்குமார் அவர்கள்
(உதவிப்பதிவாளர்-யாழ்.பல்கலைக்கழகம்)

**கௌரவ விருந்தினர்**
திருமிகு. ச. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
(சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழையமாணவர்,
ஆசிரியர் சங்கம், ஐக்கிய இராச்சியம்)

**தங்களை அன்புடன் அழைக்கின்றோம்**

குறிப்பு :- 2008 /2009 வருடங்களில் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களைப் பரிசில் பெறுவதற்காக அழைக்கின்றோம்.

யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி
21.09.2010.

கல்லூரிச்சமூகம்

(சி-1257)

## தூய வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னையின் திருவிழா



யாழ். போதனா வைத்தியசாலை

23.09.2010-26.09.2010

23.09.2010 திரிதின வழிபாடுகள்
மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலை
கொடியேற்றத் துடன் ஆரம்பமாகும்.
25.09.2010 மாலை 4.30 மணிக்கு குணமாக்கல்
வழிபாடும் நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.
26.09.2010 காலை 7.15 மணிக்கு திருநாள் திருப்பலியும்
அன்னையின் ஆசீரும் இடம்பெறும்.
அன்னையின் ஆசீர் பெற அனைவரையும் அன்போடு
அழைக்கின்றோம்.

ஆன்ம குருவும்
நலன்விரும்பிகளும்.

(2517)

காலதாமதமா? நெரிசல் பிரச்சனையா?
அநாவசிய தொந்தரவா?
இனி கவலையை விடுங்கள்

இதோ வந்து விட்டது

யாழில் முதல் முறையாக

பருத்தித்துறையில்
இருந்து யாழ்ப்பாணம்
வரையிலான
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
மாணவர்களுக்கான
பிரத்தியேக பஸ் சேவை



Athika Means More

STAFF SERVICE..

மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள்
பதிவுகளிற்கு இன்றே விரையுங்கள்

அதிக்கா பிரைவேட் லிமிடெட்
734, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021-320 7455
077-389 5395

உங்களின் வீட்டுக்கே வந்து
ஏற்றி இறக்கப்படும்.

வியர்வையில்லை
நெரிசல் இல்லை
அநாவசிய தொல்லை
இல்லை இல்லை இல்லை

சி (1256)






தமிழரசுக் கட்சியின் கிளை அலுவலகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் நீதிமன்ற வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராஜா கட்சி அலுவலகத்திற்கான பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்து, உரையாற்றுவதையும், இதில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் : சுன்னாகம் - நிருபர்)

## செயலமர்வு

(சாவகச்சேரி)

வடமாகாணத்தில் ஆரம்பக்கல்வி கற்பதற்கு பயிற்சி பெறாத பட்டதாரிகளுக்கும் ஆசிரிய உதவியாளர்களுக்கும் மற்றும் ஆரம்பக்கல்வி கற்பிக்கும் வேறு பாட ஆசிரியர்களுக்குமான பயிற்சிச் செயலமர்வு இம்மாத இறுதியில் வடமாகாண கல்வி வலயங்களில் நடைபெறவுள்ளது.

இதில் ஆரம்பக்கல்வி பயிற்சி பெறுவதற்காக வடக்கு மாகாண ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் கடந்த வாரம் திருகோணமலையில் பயிற்சி பெற்று வந்துள்ளனர். இவர்களே மேற்படி பயிற்சி செயலமர்வை நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-7-29)

## மக்கள் களரி நாடகம் மேடையேற்றம்

(அல்வாய்)

வடமராட்சி- வலயப் பாடசாலைகளில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் மக்கள் களரி நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

இதற்கமைய யா/ வடஇந்து மகளிர் கல்லூரியில் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருடன் வந்தான் என்ற நாடகமும் காலை 11.30 மணிக்கு மாயப்பட்டாடை எருக்கலம்பூ என்ற இரு நாடகங்களும் மேடையேற்றப்படவுள்ளன.

இதற்கான நுழைவுக்கட்டணமாக ஒவ்வொருவருக்கும் 30 ரூபா அறவிடப்படும் எனவும் இதற்கு வேண்டிய ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறு யாழ்.மாவட்ட மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

மேலும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும் மக்கள் களரி நாடகம் மேடையேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஸ்ரீ-19)

## அறிவூற்றகம் நூல் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கலாநிதி வே.யுகபாலசிங்கம் எழுதிய அறிவூற்றகம் நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு மண்டபத்தில் கல்லூரி அதிபர் நோயல் ஏ.விமலேந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை வண.கலாநிதி. எஸ்.ஜெபநேசன், வெளியீட்டுரையை பட்டப்படிப்புக்கள் பிரிவு முதுநிலை விரிவுரையாளர் அ.குமாரவேலு ஆகியோர் வழங்கவுள்ளனர்.மேலும் நூலின் தேடலினூடாக சில கருத்துக்களை பட்டப்படிப்புகள் பிரிவு விரிவுரையாளர் என்.குகபரன் வழங்கவுள்ளார்.

(ஸ்ரீ-4)

## சிறுவர் அரங்கப் போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி பிரிவினரின் சிறுவர் அரங்கப் போட்டிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் பங்கு பற்றும் பாடசாலை மாணவர்கள் பொறுப்பாசிரியர்களுடன் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறும் இப்போட்டியில் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் யாவும் அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள சிறுவர் தினத்தன்று மாகாண மட்டப் போட்டிக்காக அரங்கேற்றப்படவுள்ளதுடன் என்றும் போட்டியில் தெரிவு செய்யப்படாத நிகழ்வுகள் அதே தினம் பாடசாலைகளில் கொண்டாடப் படும் சிறுவர் தின நிகழ்வுகளில் அரங்கேற்றப் படும் என்றும் வலயக் கல்விப் பணிமனை யின் ஆரம்பக்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் த. சிறீஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-7-29)

## வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோவிலுக்கு முதற்கட்டமாக மின்னிணைப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள நாகர்கோவிலுக்கு முதற்கட்டமாக மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மின் இணைப்பை ஆரம்பித்து வைத்ததுடன் மின் இணைப்புக்கான பெயர்ப் பலகையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.அதன் பின்னர் அவர் கருத்துத் தெரிவிக்கையில், அடுத்த கட்டமாக மருதங்கேணி பகுதிக்கு விரைவாக மின்சாரம் வழங்கப்படும் எனவும் நாகர் கோயில் பகுதியிலும் மக்கள் விரைவில் மீள் குடியமர்த்தப்படுவர் என்றும் மக்களிடம் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இந்நிகழ்வில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் எஸ்.திருலிங்கநாதன் மற்றும் மின்சாரசபையைச் சேர்ந்த பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-7-43)

## வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சம்மேளனத்திற்கு புதிய கட்டடம்

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் சம்மேளத்திற்கு 20 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடத்தை அமைப்பதற்கு போரூட் நிறுவனம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் குடத்தனையில் உள்ள உதவி அரச அதிபர் பணிமனையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் எஸ். சிவலிங்கநாதன் மற்றும் போரூட் நிறுவன இணைப்பதிகாரிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் சங்க பிரதிநிதிகள் முன்னிலையில் கைச்சாத்திடப் பட்டது.

அத்துடன் கட்டடப் பணிகளை கண்காணிப்பதற்கு கடற்றொழிலாளர்கள் சமாசத்தால் 5 பேர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டது.(ஸ்ரீ-7-43)

## விரைவு கணித செய்கைப் போட்டிகள்

(சாவகச்சேரி)

வடமாகாண கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கிணங்க 'விரைவு கணித' செய்கைப் போட்டிகள் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 2,3,4,5 ஆகிய மாணவர்களுக்கு அடுத்த மாதம் 4 ஆம் திகதியும் 5 ஆம் திகதியும் பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும் என்று தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிறீஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-7-29)

## வீட்டு நிர்மாணிப்பு வேலைகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் நிதியுதவியுடன் வடமாகாணத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள 50 ஆயிரம் வீடுகள் நிர்மாணிப்புப் பணிகளுக்காக தச்சுவேலை, மேசன் வேலைகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.இதற்கு தகுதியானவர்கள் பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, செய்ய விரும்பும் வேலை, (தச்சுவேலை, மேசன் வேலை), தேசிய அடையாள அட்டை இல, தொலைபேசி இலக்கம், தொழில் தகைமைகள், தொழில் அனுபவம், வேலை செய்ய விரும்பும்மாவட்டம்(யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்)போன்ற விபரங்களுடன் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டத் தொழில் அலுவலகம், வீரசிங்கம்கட்டடம், யாழ்ப்பாணம் என்றமுகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் கேட்டுக்கொள்கின்றார்.

(ஸ்ரீ-4)

## இறுதிப் பரீட்சை

பலாலி ஆசிரிய கலாசாலையில் இதுவரை நடந்தேறிய இறுதிப் பரீட்சையில் நூதன சித்தி பெற்றோர் மற்றும் சித்தி அடையாத ஆசிரிய மாணவர் அனைவரையும் எதிர்வரும் மார்கழி மாதம் நடைபெறவுள்ள பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் முகமாக எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை அலுவலகத்தில் தவறாது சந்திக்கும்படி அதிபர் எம்.இக்னேசியஸ் கேட்டுக்கொள்கிறார்.

(ஸ்ரீ-2)

## மணிவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கழகமும் மாணவர் மன்றமும் இணைந்து நடத்தும் கலாசாலை பிரதி அதிபர் கலாநிதி செ.திருநாவுக்கரசின் மணிவிழா நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-4)




## தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையர்டல் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள புதிய உயர் கலைக்கல்லூரியில் நடைபெற வுள்ளது.

இதில் நிரந்தர நியமனம் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துத் தொண்டராசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

## வலுவிழந்தோர் தொடர்பான கணக்கெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுத் தொண்டர்களால் வலுவிழந்தோர் தொடர்பான கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது

இதில் தங்களைப் பதிவு செய்யத்தவறியவர்கள் வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் தொடர்பு கொள்ள முடியும் என பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வலுவிழந்தோருக்கான அடையாள அட்டை ஒன்றும் வழங்கப்படவுள்ளதுடன் அதன் மூலம் பொருத்தமான உதவிகளை எதிர்காலத்தில் பெற முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)



IDM சுன்னாகம் கிளையின் பிறந்த நாள் விழா அண்மையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர் மங்கல விளக் கேற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மற்றும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

## டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க 35 தீவிர சிகிச்சை பிரிவுகளை ஸ்தாபிக்க நடவடிக்கை

(கொழும்பு)

முறையாகவும் உரிய தரத்துடனும் டெங்கு காய்ச்சலுக்கான சிகிச்சைகளை அளிப்பதற்கு ஏதுவாக சுகாதார அமைச்சு பல்வேறு நட வடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற் கமைய தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலை களில் தீவிர சிகிச்சைப் பிரிவுகளை ஸ்தாபிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப் பதற்காக 35 தீவிர சிகிச்சை பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் பதில் செயலாளர் வைத்திய கலா நிதி பாலித மகிபால குறிப்பிட்டார்.

தெரிவு செய்யப்பட்ட 15 வைத்திய சாலை களில் தற்போது இந்த தீவிர சிகிச்சை பிரிவு கள் அமைக்கப்படுவதாகவும் இதன் முதலா வது பிரிவு மாத்தறையில் அமைக்கப்பட்டு அண்மையில் சுகாதார அமைச்சினால் திறந்து வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் ஏனைய வைத்தியசாலைகளி லும் குறிப்பிட்ட தீவிர சிகிச்சைப் பிரிவுகளை ஸ்தாபிக்கும் நடவடிக்கை துரிதமாக இடம் பெற்றுவருவதாகவும் இந்த நடவடிக்கை யால் டெங்கு மரணங்களின் எண்ணிக் கையை கட்டுப்படுத்த முடியும் எனவும் அமைச்சரின் பதில் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## வடமாகாணத்தில் 3 புதிய வீதி அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுப்பு

(கொழும்பு)

வடமாகாணத்தில் வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 3 புதிய வீதி அபிவிருத்தி திட்டங் கள் முன்னெடுக்கப்பட்டவுள்ளன.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நடுப் பகுதி வீதி இணைப்புத் திட்டமும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மோதல் களால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான அவசர திட்டமும் யாழ். மாவட்டத்தில் மாகாண சபை வீதிகளும் இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி திணைக்களத்தின் வடமாகாணத்திற்கு பொறுப் பான திட்டப்பணிப்பாளர் ரி.சிவராஜ லிங்கம் தெரிவித்தார்.

இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் எதிர் வரும் நவம்பர் மாதம் அளவில் ஆரம் பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட் டார்.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங் களில் மொத்தமாக 148 கிலோ மீற்றர் நீள மான வீதிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள் ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 32 கிலோமீற்ற ரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 30 கிலோ மீற்றருமாக மொத்தம் 62 கீலோ மீற்றர் மாகாண சபைக்குட்பட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் உலக வங்கி யின் நிதியுதவியின் கீழ் சுமார் 100 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் அபிவிருத்தி செய்யப் படவுள்ளன. (ஸ்ரீ-4)

## வன்னியில் வீடுகளில் செயற்பட்ட இராணுவமுகாம்கள் அகற்றப்படுகின்றன

### இராணுவப்பேச்சாளர் தெரிவிப்பு

வன்னிப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வீடுகளில் செயற்பட்ட இராணுவமுகாம்கள் தொடர்ந்து அகற்றப்படுவதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபயமெதவல தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில், ஏற்கனவே பல வீடுகளிலிருந்து வெளியேறிய இராணுவம் அவற்றை அதன் சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்துள்ளது.

தொடர்ந்தும் இராணுவம் இருந்து வரும் வீடுகளுக்கு நியாயமான வாடகை செலுத்தப் பட்டு வருகிறது. இதேவேளை வீடுகள் சம்பந் தமான பிரச்சினைகளை அந்த பிராந்தியத் தின் சிவில் இணைப்பதிகாரிகளிடம் அல்லது பொது நிர்வாகப்பிரிவிடம் சமர்ப்பிக்க முடியும் என்று தெரிவத்துள்ளார். (ஸ்ரீ-7)

## உதவி பொலிஸ் அத்தியட்சகர் உட்பட 8 பொலிஸார் கைது

(கொழும்பு)

வாகரை உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் 7 பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொதுமக்கள் இருவரும் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

திம்புலாகலவிலுள்ள சிறிபுர எனும் இடத் திலுள்ள தேவாலயமொன்றில் இவர்கள் புதையல் தோண்டியதாக பொலிஸார் தெரி விக்கின்றனர்.

இது தொடர்பாக கிராமவாசிகளிடமிருந்து கிடைத்த இரகசிய தகவல் ஒன்றை அடுத்து பொலனறுவை மன்னம்பிட்டி பொலிஸ் சோத னைச்சாவடியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ள னர். (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

**அரசு**

Botanical Name - Ficus religisa
family - Moraceae
Engl - Bo- tree
Sinh - Bo - gaha

இம்மரம் சுமார் 10 அல்லது 15 மீற்றர் உயரம் வரைக்கும் ஏராளமான கிளைகளு டன் நான்கு பக்கங்களிலும் நன்கு படர்ந்து அடர்த்தியாக வளரும். அடிமரம் சுமார் ஒன்று தொடக்கம் 2 மீற்றர் நீளம் குறுக்கள வுள்ளது. மேடுபள்ளங்களையுடையது. சாம்பல் நிறப்பட்டை அதிகமாகவும் கரடு முரடாகவும், வெடிப்புடனுமிருக்கும். சுமார் 4 தொடக்கம் 6 செ.நீறமுள்ள காம்பில் சுமார் 8 தொடக்கம் 12 செ.மீ நீளமும், அகலமும் உள்ள முக்கோண வடிவமுள்ள இலையைக் காணலாம்.இலையின் அடிப்பாகம் அகன்றும், நுனி குறுகியுமிருக்கும். இலை சுமார் 5 இலிரு ந்து 8 செ.மீ நீளமுள்ளதும், 1,2 மி.மீ அகலமுள்ளதுமான நீண்ட வால் போன்ற நுனியைப் பெற்றிருக்கும். இலைகள் மாறி, மாறியோ அல்லது எதிர் எதிராகவோ இல்லா மல் சிறிது கூட்டமாகக் காணப்படும். இலை நல்ல அழுத்தமும், வழுவழுப்பும், மினு மினுப்பும், நன்கு தெரியக் கூடிய நரம்புகளு டனும் காணப்படுகின்றது. இதன்பழம் சிவப் பாகவும் நிறைய விதைகள் உள்ளதுமாகக் காணப்படும்.

**பரம்பலும், இனவிருத்தியும்:**

இதுதானாக முளைத்துவளரும், பயிராக் கப்படுவமுண்டு. சிறுகன்றுகளைப் பிடுங்கி நட்டும், விதை போட்டும் பயிரிடலாம். சுமார் 8 அடி உயரத்திற்கு மேல் போகாமல் செடியை வெட்டிக் குறைத்துவிட்டால், அதிலிருந்தும் பல கிளைகள் தோன்றி செடி நன்கு படர்ந் தாற்போல வளரும். எல்லாவகை மண்களி லும் நன்கு வளரும்.

**மருத்துவப் பயன்கள்:**

அரசமரத்து இலைகளுக்கு ஒரு சிறப்பான குணம் உண்டென்று விஞ்ஞானி கள் கருதுகின்றனர். இந்த இலைகள் கரிய மில வாயுவை அதிக அளவிற்கு உட் கொண்டு, பிராண வாயுவை அதிக அளவிற்கு வெளி யிட்டு, காற்று மண்டலத்தை மற்ற தாவரங் களைவிட அதிக அளவிற்கு சுத்தப்படுத்தி வருகின்றது. இதனால் தான் இம் மரத்தை மக்கள் வலம் வரும் வழக்கம் ஏற்பட்டது.

♦ அரசம் பழமானது, அத்திப்பழும்




போல இருக்கும். அப்படியே சாப்பிடலாம். விழுந்து உலர்ந்த இதனை நன்கு பொடியாகச் செய்து சூரணமாக வைத்துக் கொள்ள வேண்டும். 5 தொடக்கம் 10 கிராம் இப் பொடியை நாளும் காலை, மாலை பாலில் கலந்து சீனி சேர்த்து கோப்பி போல 60 தொடக்கம் 90 நாட்கள் சாப்பிட, ஆண்மை பெருகும்.

♦ இலைக் கொழுந்து ஒரு பிடி எடுத்து மண்சட்டியில், போட்டு 1/2 லீற்றர் நீர்விட்டு 1/4 லீற்றராக சுண்டக்காய்ச்சி, கசாயமிட்டுக் குடிக்கலாம். அல்லது இலைக்கொழுந்தை அரைத்து 5 கிராம் அளவு பாலில் கலந்து 40 நாட்கள் தொடர்ந்து குடித்துவர பெண்கள் கருத்தரிக்க வாய்ப்புண்டு. புளி உணவை குறைக்க வேண்டும்.

♦ இதன் இலைக்கொழுந்து ஒரு கைபிடி யளவு எடுத்து 1/2 லீற்றர் நீர்விட்டு 1/4 லீற்ற ராக சுண்டக்காய்ச்சி 30 மில்லி எடுத்து காலை, மதியம், மாலை என மூவேளை கொடுக்க காய்ச்சல் தணியும்.

♦ மரப்பட்டைகளை சேகரித்து, சிறிது, சிறிதாக அரிந்து நிழலில் உலர்த்தி, எரித்த சாம்பலை தேங்காய் எண்ணெயுடன் கலந்து தடவி வர சொறி, சிரங்கு குணமாகும். மேலும் இப்பொடியை சாம்பிராணியுடன் சேர்த்து புகைத்தால் தீங்குசெய்யும் நுண்ணுயிர்க் கிருமிகள் வீட்டில் தங்காது வெளியேறும்.

♦ இதன் மரப்பட்டைகளை நிழலில் உலர்த்தி, பொடி செய்து எடுத்துக் கொள்ள வும். 15 கிராம் அளவு பொடியை 200 மில்லி வெந்நீரில் 15 நிமிடங்கள் ஒன்றாக கலக்கி ஊறவிட்டு வெந்நீர் ஊறல் குடிநீரை அருந்த தொண்டைக்கட்டு, விக்கல் குணமாகும்.

♦ இதன் தளிர் இலைகளை அமைத்து கால்பித்த வெடிப்பிற்கு பூச குணமாகும்.

♦ அரசமரத்தின் அடிப்பகுதியை கீறி, கசியும் பாலை பாதங்களில் ஏற்படும் வெடிப் பிற்குப் பூச வெடிப்பு மாறும்.

♦ விதைகளை நன்கு நிழலில் உலர்த்தி, பொடிசெய்து 2 தொடக்கம் 4 கிராம் அளவு பாலில்

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

சேர்த்து உட்கொள்ள மலச்சிக்கல், வரட்டு இருமல் தீரும்.

நடுத்தர கொழுந்தாகவுள்ள 2,3 இலைகளை தனியாகவும், கரிசாலை இனம், துளசி, குப்பைமேனி, தும்பை இவற்றில் ஏதாவது ஒன்றினுடைய 3,4 இலைகளோடு சேர்த்து மென்றுண்ணலாம். அல்லது சாறு பிழிந்து உண்ணலாம்.

தேங்காய், தக்காளி, நெல் லிக்கனி, இஞ்சி இவற்றோடு சேர்த்து சட்னி செய்தும் உண்ணலாம். இதனால் மேற்கூறிய பல னைப் பெறலாம்.

## மன்னார் தமிழ்ச் செம்மொழி விழாவில்

# பேராளர்களாக பங்கேற்க விரும்புவர்கள் விண்ணப்பிக்கலாம்

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 22, 23 ,24 ,25 ஆகிய திகதிகளில் மன்னாரில் நடை பெறவுள்ள தமிழ்ச் செம்மொழி விழாவில் பேராளர்களாகக் கலந்துகொள்ள விரும்புகின்றவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்போர் தங்கள் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றோடு தங்கள் கலை இலக்கிய செயற்பாடுகள் மற்றும் முயற்சிகள் பற்றிய விரிவான குறிப்புகளையும் வழங்க வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பேராளர் விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனைத்தும் தலைவர், பேராளர் தொடர்புக் குழு, மன்னார் தமிழ்ச்சங்கம், புனித வளனார் மாணவர் இல்லம், இல 130, வைத்தியசாலை வீதி, மன்னார் என்ற முகவரிக்கோ அல்லது nesanmnr@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல்வேண்டும்.

இத்திகதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது .விண்ணப்பங்கள் பேராளர் தொடர்பு குழுவினால் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே பேராளர்களாக பங்கேற்க முடியும் என மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்திரு தமிழ் நேசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 3 இலங்கைத்தமிழர்கள் சென்னையில் கைது

சென்னை பாரிமுனையில் 3 இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முறையாக ஆவணமின்றி சென்னை வந்த இவர்களை கியூ பிரிவு பொலிஸார் பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது அவர்கள் யாழ்ப்பாணம் , முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்ததுடன் இவர்கள் மூன்று பேரும் விடுதலைப்புலி இயக்கத்தை சேர்ந்தவர்களா என்றும் கியூபிரிவு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஸ்ரீ-2)

# கட்டாரிலிருந்து இலங்கைக்கு எல்.எம்.ஜி எரிவாயு பெறுவது குறித்து பேச்சுவார்த்தை

(கொழும்பு)

கட்டாரிலிருந்து இலங்கைக்கு எல். எம். ஜி.எரிவாயுவினை பெற்றுக்கொள்வது தொடர்பான சாத்தியக்கூறுகள் பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அந் நாட்டு தலைவர் ஷீக் நவாட் பின் கலிஃ பா அல் சானிக்கும் இடையில் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை யொன்று இடம்பெற்றுள்ளது.

95 ஆயிரம் இலங்கையர்கள் கட்டாரில் வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள நிலையில் அந்நாட்டு வர்த்தகப் பிரமுகர்கள் இலங்கையில் முதலீடு செய்வது தொடர்பான சாத்தியக்கூறுகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடக பணிப்பாளர் லூசியன் ராஜகருணா உறுதிப் படுத்தினார். (ஸ்ரீ-2)

# அரசாங்கம், பாராளுமன்றத்தைக் கூட இல்லாதொழிப்பதற்கு முயற்சிக்கலாம்

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தைக் கூட இல்லாதொழிப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாக ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்திற்கு பதிலாக ஏதேனும் ஓர் அதிகாரசபையை உருவாக்கி அதன் மூலம் அரசாங்கம் ஆட்சி நடாத்துவதற்கு முனைப்பு காட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமையவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மாநகரசபை முறைமையை இல்லாதொழித்து பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் ஓர் அதிகாரசபையை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் உரிமைகளை மேலும் முடக்குவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தேவைக்காக தேர்தல்களை சில காலங்களுக்கு இடை நிறுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க ,ஜே. ஆர் ஜயவர்தன, எப். ஆர். சேனாநாயக்க, ஆர். பிரேமதாஸ மற்றும் ஏ.ஈ.குணசிங்க போன்ற சிரேஷ்ட அரசியல் தலைவர்களின் அரசியல் பிரவேசத்திற்கு கொழும்பு மாநகர சபை ஓர் களமாக அமைந்ததென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மைக் கால நடவடிக்கைகளின் மூலம் அரசாங்கத்தின் சர்வாதிகாரப் போக்கு வெளிச்சமாகியுள்ளதெனவும் சரத் பொன்சேகாவிற்கு இராணுவ நீதிமன்றம் மூன்றாண்டுகால சிறைத்தண்டனை விதித்தமை இதற்கு மற்றுமொரு சிறந்த உதாரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவின் உரிமைகளுக்காக ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ச்சியாக போராடும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தலைமன்னாருக்கான ரயில்பாதை நிர்மாணம் அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

மதவாச்சிக்கும் தலைமன்னாருக்குமிடையிலான புகையிரதப் பாதையை மீளமைக்கும் பணிகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில்ஆரம்பிக்கப்படுமென புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புகையிரதப் பாதை நிர்மாணிப்பதற்குத் தேவையான தண்டவாளங்கள், சிலிப்பர் கட்டைகள் மற்றும் பொருட்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்கள வர்த்தக அத்தியட்சகர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையான 106 கிலோமீற்றர் நீளமான பாதையை மீளமைப்பதற்கான ஒப்பந்தத்தில் இலங்கையும் இந்தியாவும் கடந்த ஓகஸ்ட் மாதம் கைச்சாத்திட்டன.

இதன்படி முதற்கட்டத்தின் கீழ் மதவாச்சியில் இருந்து மடு வரையான 43 கிலோ மீற்றர் தூர வீதி மீளமைக்கப்படும்.

இதற்காக 81.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படவுள்ளன.

இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளுக்கு 149.75 மில்லியன் டொலர் செலவிடப்படவுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவிக்கின்றது. (ஸ்ரீ-2)

# கரடியனாறு சம்பவத்துக்கு ரஷ்யா அனுதாபம்

பாரிய இழப்புக்களை ஏற்படுத்திய கரடியனாறு வெடிப்புச் சம்பவத்திற்கு ரஷ்யா ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

இந்த வெடிப்புச் சம்பவம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ரஷ்ய ஜனாதிபதி டிமித்ரி மெட்வடேவ் அனுதாபச் செய்தியொன்றை அனுப்பியுள்ளதாக அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமது கவலையைத் தெரிவித்துள்ளதுடன் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைவதற்கு தாம் பிரார்த்திப்பதாகவும் ரஷ்ய பிரதமர் தமது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வைத்தியசாலைகள் அபிவிருத்திக் குழு யாப்பில் திருத்தம் மேற்கொள்ளத் தீர்மானம்

(கொழும்பு)

வைத்தியசாலைகள் அபிவிருத்திக் குழு யாப்பில் திருத்தம் மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனாவின் ஆலோசனைக்கமைய இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

வைத்தியசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அபி விருத்திக் குழுக்களுக்கு தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ள வாய்ப்புக்கள் இந்தப் புதிய திருத்தத்தின் மூலம் அதிகரிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் அபிவிருத்திக் குழுக்களுக்கும் இடையில் சீரான உறவுகள் பேணப்படுவதில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. புதிய யாப்புத்திருத்தம் அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# 2030ஆம்ஆண்டளவில் இலங்கையில் முதலாவது அணு மின் உற்பத்தி நிலையம் உருவாக்கப்படும்

## அரசாங்கத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

2030ஆம் ஆண்டளவில் இலங்கையின் முதலாவது அணு மின் உற்பத்தி நிலையம் உருவாக்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்தத்தின் பின்னரான பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும் பாரியளவு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும் அணுமின் உற்பத்தி நிலையங்களின் உருவாக்கம் அவசியம் என தெரிவிக்கப்படுகிறது.

அணுமின் உற்பத்தி நிலையங்களின் மூலம் குறைந்த செலவில் மின்சாரத்தை விநியோகம் செய்யக் கூடிய சாத்தியம் உருவாகும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளதுடன் முதல் கட்டமாக 1000 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு உத்தி தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் அணு மின்சாரத்தை உற்பத்தி செய்வது குறித்த சாத்திய ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது டன் உலக அணுமுகவர் நிறுவனத்தின் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மின் உற்பத்தி நிலையத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் பாதுகாப்பான முறையில் அணுக்கழிவுகளை அகற்றுவதற்கான திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என அரசாங்க அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் உதவியுடன் ஏற்கனவே இரண்டு பாரிய அனல் மின் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)





உடுவில் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையேயான விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி வினோதினி ஸ்ரீ மேனன் மற்றும் இளைஞர் சேவை உத்தியோகத்தர் கணபதிப்பிள்ளை ஆகியோர் பரிசில் வழங்குவதை படங்களில் காணலாம். (படங்கள் தெல்லிப்பழை நிருபர்)

# ஐ. தே.கட்சியின் நிறைவேற்றுக்குழு தீர்மானங்கள் தமது கட்சி நடவடிக்கைகளைப் பாதிக்காது

## முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழு தீர்மானங்கள் தமது கட்சி நடவடிக்கைகளை பாதிக்காது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

கட்சிதாவுவோர் தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழு அண்மையில் எடுத்த தீர்மானங்கள் தமது கட்சி உறுப்பினர்களுக்கு பொருந்தாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.


ஐக்கிய தேசியக்கட்சியின் யானைச் சின்னத்தில் தமது கட்சி போட்டி இட்டாலும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல்களுக்கு முன்னதாக முக்கிய விடயங்கள் தொடர்பில் இரு கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது கட்சி உறுப்பினர்கள் கட்சி தாவினால் அது தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகளை கட்சியின் அதி உயர் பீடம் தீர்மானிக்கும் எனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுடன் இந்த விடயங்கள் தொடர்பில் தெளிவான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது டன் புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தேர்தல் சட்டங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படும்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு



(கொழும்பு)

தேர்தல் சட்டங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தேர்தலில் 50 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் கட்சி உறுப்பினர்களே உள்ளூராட்சி மன்றங்களில் தலைமைப் பொறுப்பிற்கு நியமிக்கப்படுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி ஒன்று 50 வீதத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்றுக்கொண்டு வெற்றியீட்டினால் மேஜர்கள் ,தலைவர்கள் மற்றும் பிரதித் தலைவர்கள் சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு அமைய நியமிக்கப்படுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான சட்டமூலம் இந்த வாரத்தில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிட்டுள்ள எதுடன் உத்தேச உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டம் தொடர்பான விவாதம் வேறு ஒரு தினத்தில் நடத்தப்படவுள்ளது.

புதிய முறையில் அடிப்படையில் 30 வீதமான உறுப்பினர்கள் விருப்புத் தெரிவு முறையில் மூலமும் 70 வீதமான உறுப்பினர்கள் தொகுதி அடிப்படையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றங்களில் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவு தோற்கடிக்கப்பட்டால் அதன் தலைவர் பதவியை இராஜினாமா செய்ய நிர்ப்பந்திக்கும் வகையில் சட்ட திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது.

நாட்டை அபிவிருத்தி செய்வதினை இலக்காகக் கொண்டு இந்த சட்ட திருத்தங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன. புராதன காலம் முதலே இலங்கையின் கிராம சபை ஆட்சி முறைமை நிலவியதாக அமைச்சர் தினேஷ்குணவர்த்தன சுட்டிக்காட்டியுள் ளார்.

இவ்வாறு வலுவான ஜனநாயகக் கட்டமைப்பைக்கொண்ட எமது நாட்டுக்கு பிரித்தானியாவும் அமெரிக்காவும் நல்லாட்சி நடத்துவது குறித்து பாடம் நடத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2-4)

# பிரித்தானியாவில் தொழில்வாய்ப்பு பெற்றுத்தருவதாக கோடிக்கணக்கில் மோசடி செய்த நபர்கள் கைது

(கொழும்பு)

பிரித்தானியாவில் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாக கோடிக் கணக்கில் மோசடி செய்த நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கண்டி அனிவத்த பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட குறித்த நபர்கள் தந்தையும் மகனும் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

பிரித்தானியாவில் வேலை வாய்ப்புப் பெற்றுக்கொடுப்பதாகத் தெரிவித்து இளைஞர் யுவதிகளிடமிருந்து 15 முதல் 18 இலட்ச ரூபா பணம் அறவீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல வருடங்களாக இந்த மோசடி இடம் பெற்று வருவதாகவும் இரண்டு கோடிக்கும் அதிகமான பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

40க்கும் மேற்பட்டவர்களிடமிருந்து இவ்வாறு பணம் திரட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர்களினால் வெள்ளவத்தை மற்றும் களுபோவில ஆகிய பிரதேசங்களில் நடத்தப்பட்டு வந்த இரண்டு நிறுவனங்கள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன.(ஸ்ரீ-4)

## பூரணை தின அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்த பூரணைதினத்தில் நடத்தி வரும் *அகத்தியர் தேவார திரட்டு முற்றோதல், பன்னிருதிருமுறை பாராயணம்* இன்று காலை 7 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சுவாமி தேவஸ்தானத்தில் தேவஸ்தான அறங்காவலர் அபிவிருத்தி சபையினரின் அனுசரணையுடன் தினமும் நடைபெற்று வரும் 6ஆம் திருமுறை முற்றோதலைத் தொடர்ந்து மன்றத் தலைவர் பண்டிதர் வ. யோின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-4)

# 22.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1499 - சுவிற்சர்லாந்து விடுதலை பெற்ற தனி நாடாகியது.
- 1692 - ஐக்கிய அமெரிக்காவில் சூனியக்காரர்களின் கடைசித் தொகுதியினர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1711 - டஸ்கரோரா பழங்குடிகள் வட கரொலைனாவில் பாம்லிக்கோ ஆற்றுப் படுகையில் குடியேற்றவாசிகளைத் தாக்கி 130 பேரைக் கொன்றனர்.
- 1784 - அலாஸ்காவின் கோடியாக் என்ற இடத்தில் ரஷ்யா தனது குடியேற்றத்தை ஆரம்பித்தது.
- 1877 - யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் பத்திரிகையின் ஆசிரியராக தமிழறிஞர் அருளப்ப முதலியார் நியமிக்கப்பட்டார்.
- 1888 - நஷனல் ஜோகிரபிக் மகசின் (National Geographic Magazine) முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1893 - அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட தானுந்து முதன் முதலாகக் காட்சிப்படுத்தப்பட்டது.
- 1896 - பிரித்தானியாவின் அரச வம்சத்தில் அதிக காலம் ஆட்சியில் இருந்த பெருமையை விக்டோரியா மகாராணி பெற்றார்.
- 1908 - பல்கேரியா விடுதலையை அறிவித்தது.
- 1934 - வேல்ஸில் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 266 பேர் கொல்லப்பட்டனர்.
- 1941 - யூதர்களின் புத்தாண்டில உக்ரேனில் வின்னிட்சியா நகரில் 6 ஆயிரம் யூதர்கள் நாசி ஜெர்மனியரினால் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் முதல் நாட்களில் கொல்லப்பட்ட 24ஆயிரம் யூதர்களில் உயிர் தப்பியோராவர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ரஷ்ய இராணுவம் எஸ்தோனியாவின் தலைநகர் தாலின் நகரினுள் நுழைந்தனர்.
- 1955 - ஐக்கிய இராச்சியத்தில் ஐ.டி.வி தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1960 - மாலிக் கூட்டமைப்பில் இருந்து செனெகல் விலகியதை அடுத்து சூடானியக் குடியரசு மாலி எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1965 - இந்திய - பாகிஸ்தான் போர்: 1965 இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் காஷ்மீர் தொடர்பாக இடம்பெற்ற போர் ஐ.நா.வின் போர் நிறுத்த அழைப்பை ஏற்று முடிவுக்கு வந்தது.
- 1970 - மலேசியாவின் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் தனது பதவியை விட்டு விலகினார்.
- 1975 - ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி ஜெரால்ட் ஃபோர்ட் கொலை முயற்சி ஒன்றில் இருந்து தப்பினார்.
- 1980 - ஈரான் - ஈராக் போர்: ஈராக் ஈரானை முற்றுகையிட்டது.
- 1993 - ஜோர்ஜியாவின் பயணிகள் விமானம் ஒன்று சுகுமி என்ற இடத்தில் தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதில் 108 பேர் கொல்லப்பட்டனர்.
- 1995 -நாகர்கோயில் பாடசாலை சிறார்களின் படுகொலை: 1995 யாழ் நாகர்கோயில் பாடசாலை மீது 12.50 மணிக்கு இலங்கை விமானப்படையினர் நடத்திய குண்டுவீச்சில் 30 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.
- 1997 - அல்ஜீரியாவில் 200 கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2006 - MSN தமிழ், ஹிந்தி பீட்டாவிற்கு விடைகொடுத்து இறுதிப் பதிப்பை ஆரம்பித்ததோடு, மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் பதிப்பை ஆரம்பித்தது.


## பிறப்புகள்

- 1791 - மைக்கேல் பரடே, ஆங்கில அறிவியலாளர் (இ. 1867)

## இறப்புகள்

- 2009 - எஸ்.வரலட்சுமி, நடிகை, பாடகி (பி. 1927)
- 2009 - ஆர்.பாலச்சந்திரன், பேராசிரியர், கவிஞர்

**1914 - ஜெர்மனியின் எம்டன் நாசகாரிக் கப்பல் இரவு 9.30 மணிக்கு சென்னைத் துறைமுகத்தையும் மற்றும் நகரப் பகுதிகளையும் குண்டு வீசித் தாக்கியது. மொத்தம் 130 குண்டுகளை அது வீசியது.**



# ஈழத்தவர் வரலாறு

43

## 7.வன்னிச் சிற்றரசுகள்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

பிற்காலத்தில் சோழபாண்டி சேனைகளுடன் இலங்கைக்குப் போர்வீரர்களாக வன்னியர்கள் வந்துள்ளனர். அவர்கள் இலங்கையில் தங்கி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். மன்னார் முதல் திருகோணமலை வரையும், ஆனையிறவு முதல் காட்டுத்தம்புளை வரையுமுள்ள பரந்த பிரதேசத்தின் சிற்றரசர்களாக மாறினர். யாழ்ப்பாணத்து அரசினதும் சிங்களவரசினதும் அதிகாரங்கள் குறைந்தகாலத்தில் வன்னியர்கள் தமது பகுதிகளில் மேலாதிக்கம் வகித்துள்ளார்கள்.

யாழ்ப்பாண அரசரினதும், சிங்களவரசரினதும் வலிமை குன்றிய காலங்களில் வன்னியர்கள் தத்தமது பிரதேசங்களைத் தாமே அரசாள நோக்கம் கொண்டார்கள். தம்பலகாமத்தில் தனியுண்ணாப் பூபாலவன்னியன் என்பான் கோணேச்சரக் கோயிலதிகாரத்தைக் கவர்ந்து அவ்விடத்திற்குத் தன்னை அதிகாரியாக்கிக் கொண்டான். பனங்காமம், குமாரபுரம், ஓமந்தை முதலாமக்களை இடம்பெயரவைத்தன. இப்பிரதேசங்களில் வாழ்ந்த சிங்கள மக்கள் தென்புலம் பெயர்ந்தனர். 'காலனின் பூதங்கள் போன்ற அந்தத் தமிழ்ப்பூதங்கள் இப்படியே இந்த இராச்சியத்தையும் சமயத்தையும்னவிடத்து வன்னியர்களும் இவ்வாறு நடந்து கொண்டனர்.




கி.பி.1215 ஆம் ஆண்டு கலிங்கமாகன் என்ற மன்னன் இலங்கையைக் கைப்பற்றிப் பொலநறுவையிலிருந்து ஆட்சி செலுத்தினான். இவனது படையெடுப்பு உத்தரதேசத்திலும் இராசரட்டைப்பிரதேசத்திலுமுள்ள அழித்தனர்' என மகாவம்சம் புலம்பும். கலிங்கத்து மாகனின் படையெடுப்பால் நீர்ப்பாசனக்குளங்கள் அழிந்தன. உரிய காலத்தில் உரிய பராமரிப்பின்மையால் அவை அழிவுற்றன.

நீர்த்தேக்கங்கள், குளங்கள் முதலான நீர்ப்பாசன வசதிகளோடு வளமான வயல் நிலங்களையும் கொண்டிருந்த வன்னிப் பிரதேசம் போசித்த செறிவான குடித்தொகை அவ்விடத்தைக் கைவிட்டு இடம்பெயர்ந்த மக்களின் நகர்வோடு அருகியது. பருவக்காற்று மழையின் பொய்த்தலும், வெள்ளப் பெருக்கும், காட்டு நோய்களின் பரவலும் பல்வேறு அரசியற் காரணிகளும் மக்களை இடம்பெயரவைத்தன. தக்க பராமரிப்பு இன்றிக் குளங்கள் பாழடைந்தன. அணைகள் முறிப்புற்றன. அயனமண்டலக்காடு விரைந்து வளர்ந்து அவற்றை மூடிக் கொண்டது.

வன்னிப்பிரதேசத்தின் பண்டைக் குடியிருப்புகள் பலவும் பல்வேறு காரணங்களால் மக்களால் கைவிடப்பட்டுக் காடுகளால் மூடப்பட்டன. தென்னிந்தியப் படையெடுப்புக்கள் 13 ஆம் நூற்றாண்டில் அடிக்கடி நிகழ்ந்தன. தென்னிலங்கையை கைப்பற்ற விரும்பிய படை வீரர்கள் வடவிலங்கையிலேயே பாசறை அமைத்துக் கொண்டனர். அதேவேளை தென்னிலங்கைப்படைகளும் பாசறை அமைத்துக்கொண்டனர். அதேவேளை தென்னிலங்கைப்படைகளும் இப்பிரதேசத்தினூடாகவே வடவிலங்கையைத் தாக்க முயன்றன. இவை காரணமாக யாழ்ப்பாண அரசுக்கும் தென்னிலங்கை அரசுக்கும் இடையில் நிலைமாறு வலயமாக அமைந்த வன்னிப்பிரதேசம் யுத்தகளமாக அடிக்கடி மாற நேர்ந்தது. இவ்வாறு அடிக்கடி நிகழ்ந்தபோர்கள், மலேரியா போன்ற கொள்ளை நோய்கள், கடும் வறட்சி, வெள்ளப்பெருக்கு இவை காரணமாக ஏற்பட்ட பஞ்சம்,பசி என்பன யாவும் இந்தப்புராதன குளக்குடியிருப்புகளைக் கைவிட்டு மக்கள் வெளியேறக் காரணமாயின. இப்பிரதேசத்தில் பரவலாகக் குடியேறி வாழ்ந்த மக்கள் நான்கு திக்குகளிலும் குடிபெயர்ந்தனர். முக்கியமாக முல்லைத்தீவுக் கரையோரம், பூநகரிக் கரையோரம் என்பனவற்றிற்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் குடிபெயர்ந்தனர். வன்னியரசின் முக்கிய மையங்களான பெருங்காலி, முசலி, செட்டிகுளம், கிழக்குமூலை, வேல்பற்று, பனங்காமம், துணுக்காய், உடையாவூர், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, கரிக்கட்டு மூலை, மாகவன்னி, திருகோணமலை முதலான பகுதிகளில் மக்கள் எஞ்சினர். பருவமழை பொய்க்கும் போதும், காலந்தப்பிப் பொழியும் போதும், அதிகமாகப் பொழிந்து வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தும் போதும் இப்பிரதேசங்களில் நெற்செய்கை சிரமமானதாக அமைந்தது. இப்பிரதேசங்களில் பாழடைந்த குளங்களும், நீர்க்குன்றுகளும், பள்ளங்களும் சதுப்பு நிலங்களும் நீரைத்தேக்கி நுளம்புகளை உற்பவித்தன. அவை கொடிய மலேரியா நோயைத் தோற்றுவித்து மக்களைத் தொடர்ந்து இப்பிரதேசங்களில் வாழவிடவில்லை. மேலும் அடர்காடுகள் யானைகளின் உறைவிடமாகி இடையறாது தொல்லைகள் ஏற்பட்டன. கோடை, வறட்சி இப்பிரதேசங்களிற் கொடூரமாக இருந்தது. குடிப்பதற்கே நன்னீர் கிடையாது போனது. இத்தகு நிலைகள் வன்னிப்பிரதேசத்தில் அதிக செறிவான குடியிருப்புகளை உருவாக்க விடவில்லை.

(தொடரும்)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

## மரபணுக் கடத்தலை தடுப்பதற்கு புதிய சட்டம்

மரபணுக் கடத்தலைத் தடுப்பதற்கான புதிய சட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டிற்கு உரித்தான ஜீவராசிகள் மற்றும் தாவரங்களின் மரபணுக்கள் வெளிநாட்டிற்குக் கடத்தப்படுவதைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கமெனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சு, இலங்கை சுங்கத் திணைக்களம்,குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றை ஒன்றிணைத்து புதிய சட்ட வலையமைப்பு உருவாக்கப்படுமெனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்காக நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் அறிக்கை ,ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின் படி மரபணுக் கடத்தல் தொடர்பிலான சட்டம் கடுமையாக்கப்படுவதுடன் விதிக்கப்படும் அபராதத்தின் அளவும் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## சரத் பொன்சேகா தொடர்பில் விளக்கமளிக்கும் நோக்கில் டிரான் அலஸ் ஜெனீவா பயணம்

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் நிலைமை குறித்து விளக்கமளிக்கும் நோக்கில் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் ஜெனிவாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் பேரவையில் சரத் பொன்சேகாவின் நிலைமைகள் குறித்து டிரான் அலஸ் விளக்கமளிக்க உள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சரத் பொன்சேகாவின் உரிமைகளை மறுத்து அரசாங்கம் பழிவாங்கல் நடவடிக்கைகளைமேற்கொண்டுவருவதாகடிரான் அலஸ் மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாடு செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சரத்பொன்சேகாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் ஜெனீவாவில் அமைந்துள்ள மனிதஉரிமைகள்பேரவையில்ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு கட்சி அறிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி விரிவாக விளக்கமளிக்கும் நோக்கில் டிரான் அலஸ் ஜெனீவா விஜயம் செய்யவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)




துளிர்கள் நிறுவனத்தின் "ஒளிமயமான எதிர்காலம்" என்ற செயற்திட்டத்தின் ஒரு அங்கமான "இலசவ கற்கை செயற்பாடு" அண்மையில் யா/ஊரெழு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் துளிர்கள் நிறுவனப் பணிப்பாளர் கே.எஸ்.ரகுநாதன் மாணவர்களின் இலவச கற்கை செயற்பாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றுவதையும்,மிலேனியம் பஷன் நிறுவனத்தினர் வழங்கிய கற்றல் உபகரணங்களை அதிபர் முன்னிலையில் பணிப்பாளர் மாணவி ஒருவருக்கு வழங்குவதையும் இதில் கலந்து கொண்ட மாணவர்கள், அதிபர்,ஆசிரியைகள் ,நிறுவன உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம்.

# தேசிய கல்வி நிறுவக ஆசிரிய பயிற்சி நெறிக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

*நேற்றைய தொடர்ச்சி*

திருநானந்தம் ஜெயரூபன் (காரைநகர் கிழக்கு),செல்வி. குமாரசாமி புவனேஸ்வரி (நெடுந்தீவு), செல்வி. டிசாந்தி அன்ரனி (ஊர்காவற்றுறை),செல்வி. ஜோச் ரஜிதா (ஊர்காவற்றுறை),திருமதி. மகாலிங்கம் பிறேமலதா (ஊர்காவற்றுறை), செல்வி பத்மினி கோபாலசிங்கம் (ஊர்காவற்றுறை), கணபதிப்பிள்ளை சிவ ஸ்ரீ சாந்திநாயகன் (காரைநகர்), செல்வி. உமாதேவி ஆறுமுகம் (களபூமி),செல்வி. ராதாலக்சுமி லோகசுப்பிரமணியம் (களபூமி),செல்வி சோபிகா சிவபாலன் (நயினாதீவு),நடராசா நர்த்தனன் (நயினாதீவு),செல்வி. கந்தையா துர்க்காபரா (நயினாதீவு), திருமதி துளசி மலர் இரவிசங்கர் (நயினாதீவு),செல்வி. மதன சுரேந்திரன் சுரேகா (கொக்குவில் கிழக்கு).

செல்வி.சங்கீதா நாகராசா(நாரந்தனை வடக்கு), செல்வி. சிவரூபி நமசிவாயம் (காரைநகர்), ஞானரத்தினம் அன்ரன் அமல்ராஜ் (புங்குடுதீவு),செல்வி. சைலஜா சிவராஜன் (சரசாலை தெற்கு), செல்வி. சிவரூபி சிவராசா (சரசாலை வடக்கு), கிருஸ்ணன் திருச்செல்வம் (மட்டுவில் கிழக்கு),திருமதி. திருச்செல்வம் விஜயசிறி (மட்டுவில் கிழக்கு), செல்வி. இராகினி இரத்தினமணி(சரசாலை தெற்கு), தங்கராசா ஜெயகரன் (வரணி).

செல்வி. சரஸ்வதி சுதர்சன் (கைதடி வடக்கு), செல்வி. ஜெயா பாலையா (கைதடி வடக்கு), திருமதி. ஜெயராணி சிவநேசன் (சரவணை கிழக்கு), செல்வி பிறேமலதா அருள்நேசதாசன் (நாரந்தனை தெற்கு), திருமதி. ஜொனிற்றா மெலானி கியூமன்(கரம்பன் கிழக்கு), திருமதி. புஸ்பரஞ்சனி ஹம்சன் (நெடுங்காடு), திருமதி. தர்மலோஜினி சதீஸ்வரன் (புங்குடுதீவு), விஸ்வலிங்கம் பாலகுமார் (நயினாதீவு), திருமதி. உஷாந்தினி யோககுமார் (நயினாதீவு).

திருமதி. காந்தலோஜினி ரமணன் (நயினாதீவு), செல்வி. பெரியதம்பி சிவதர்சினி (நாரந்தனை வட மேற்கு), செல்வி.கோகுலம் செல்லத்துரை (ஆவரங்கால் மேற்கு), செல்வி. அன்ரனி ஆண்டயானா சுபைதா (மண்டைதீவு), செல்வி. சர்மிலா வடிவேலு (நயினாதீவு), கந்தசாமி சுதேஸ்(அல்வாய் மத்தி), செல்வி. தர்சினி ஜெயரட்ணம் (ஆனைக்கோட்டை), திருமதி. துதிகரன் வசந்தி (நயினாதீவு), திருமதி. அசோக்குமார் ஜெயசித்திரா (அனலைதீவு).

செல்வி. தர்மிளா சந்திரசேகரம் (அனலைதீவு), திருமதி. சுபாகரன் சுபாஜினி (நயினாதீவு), அகுஸ்தீன் யஸ்ரின்(சரவணை மேற்கு), பாலசுப்பிரமணியம் சசிக்குமார் (நீர்வேலி மத்தி), பாலச்சந்திரன் கஜதீபன் (ஏழாலை தெற்கு), பற்குணலிங்கம் ஜெயந்தன்(சுன்னாகம்), திருமதி. புஸ்பராணி சயந்தன் (நெடுந்தீவு மேற்கு), செல்வி. டலிதா தருமலிங்கம் (நெடுந்தீவு மேற்கு).

திருமதி. நளாயினி ரமணன் (நெடுந்தீவு), ஆசீர் தேவதாஸ் டேவிற்ரென் (நெடுந்தீவு), திருமதி. தோமஸ் அன்ரனற் றொஷானி (நெடுந்தீவு), இராசரத்தினம் வசீகரன்(நவாலி), சங்கரப்பிள்ளை கருணாகரன்(நெடுந்தீவு), திருமதி. மயூதினி யூட்நிக்ஸன்(நெடுந்தீவு), செல்வி. ஜீவதர்சினி இலட்சுமணன் (நெடுந்தீவு), திருமதி. சுதாகர் ரேணுகா(நெடுந்தீவு), திருமதி. ஜெயராஜ் டல்சி (நெடுந்தீவு),செல்வி. பொனாவெந்தூஸ் டேனிற்ரா டோமினிற்ரா (நெடுந்தீவு),திருமதி. ஜெயமலர் தோமஸ் அல்வின் (நெடுந்தீவு), ராஜலிங்கம் கார்த்திகேயன் (மல்லாகம் தெற்கு), செல்வி. அருள்நாயகம் அமலராஜேஸ்வரி (நெடுந்தீவு), செல்வி. நாகேந்திரன் மனோகர ராணி(நெடுந்தீவு).

திருநாவுக்கரசு ரூபாகரன் (சுழிபுரம்), செல்வி . பவானி ஆனந்த கிருஸ்ணகுமார் (சுழிபுரம்), திருமதி . தீபா சந்திரபவன் (சுழிபுரம்), தில்லைநாதன் நடனசபை (புத்தூர் மேற்கு),சிவராசா நாகதீபன்(மல்லாகம்), செல்வி.துறாயினி துரைராசா(இளவாலை), தம்பிநாயகம் நாகநாதன் (இளவாலை), திருமதி கவிதா பரமேஸ்வரன் (இளவாலை), பொன்னுத்துரை காண்டீபன் (புத்தூர்).

செல்வி.சிவதர்சினி சின்னத்தம்பி (மல்லாகம்),திருமதி கலாவதனி ரமேஸ் (இளவாலை), இராசையா சசிக்குமார் (மானிப்பாய்), திருமதி. அமித்தா ஜெயசீலன் (சுன்னாகம்), செல்வி தாமரைச்செல்வி பூபாலன் (மல்லா கம்), திருமதி ஜெயபாணு சுரேந்திரநாத் (மல்லாகம்),செல்வி காசினிதேவி நடராசா (இணுவில் கிழக்கு), ஏகாம்பரநாதன் ஸ்ரீரங்கன் (மருதனார் மடம்), செல்வி சுனிதா செல்வரத்தினம்(கொக்குவில்).

திருமதி பாலகௌரி சகாயநேசன் (சுன்னாகம்), திருமதி கலைவாணி சிவானந்தன் (மல்லாகம்), திருமதி. சோபனா குகதாசன் (பண்ணாகம் கிழக்கு), முருகன் சதீஸ் (கோப்பாய் தெற்கு), செல்வி கஜபாலினி இராசையா (நீர்வேலி மேற்கு), செல்வி விமலேஸ்வரி கதிர்காமநாதன் (சிறுப்பிட்டி வடக்கு), திருமதி. அச்சுதன் சந்திரமலர் (கரவெட்டி), செல்வி. சின்னராசா கலாசினி (புத்தூர்), திருமதி அபரஞ்சினி சிவகணநாதன் திருமதி சொருபா கண்ணதாசன் (யாழ்ப்பாணம்),

செல்வி .வக்சலா சந்திரகுமாரன் (கொக்குவில் மேற்கு),செல்வி ராஜேஸ்வரி சுப்பன் (சுன்னாகம்), செல்வி .கபேரியல் ஜெனோபா (உரும்பிராய் கிழக்கு), செல்வி தர்ஜினி தில்லைநாதன் (ஏழாலை மேற்கு),செல்வி கவிதா நடராசா (ஏழாலை மேற்கு),திருமதி ஜெயந்திநாதன் லோகேஸ்வரி (கைதடி கிழக்கு) , செல்வி. வளர்மதி யோகராஜா நாவற்குழி தெற்கு), திருமதி சந்திரசேகரம்பிள்ளை செல்வராணி (சாவகச்சேரி), செல்வி சின்னத்துரை துரைராணி (கொடிகாமம்).

மாணிக்கம் ஜெயக்குமார் (சண்டிலிப்பாய் வடக்கு),சிவதாஸ் சிவக்காந்தன் (சாவகச்சேரி), செல்வி நிசாந்தினி இராஜகுலநாயகம் (கைதடி), திருமதி.லலிதா ஜெயக்குமார் ( சாவகச்சேரி), பாலசுந்தரக்குருக்கள் உமாமகேஸ்வரன் (மீசாலை), செல்வி நாகநாதன் காயத்திரி( கொடிகாமம்), திருமதி ஜெயந்தினி நந்தகுமாரன் (கொடிகாமம்), செல்வி தங்கமலர் சண்முகம் (தச்சன் தோப்பு கைதடி), சடாச்சரம் ஏகாச்சரம் (மிருசுவில்),திருமதி. சிவயோகம் இராசவிநாயகம் (கொடிகாமம்), சண்முகம் நகுலேஸ்வரம் (கரவெட்டி), திருமதி சுகந்தி சத்தியானந்தன் (சாவகச்சேரி), செல்வி முத்துக்குமாரு பிரதீபா (சாவகச்சேரி), செல்வி முத்துக்கிருஸ்ணன் நிசாளினி (சாவகச்சேரி), செல்வி துளசிமலர் வயித்தி (சாவகச்சேரி).

திருமதி. கமலராணி இராசையா (இமையாணன்), திருமதி மதிவ தனி ரகு(உடுப்பிட்டி), திருமதி. ரகுபதி கவிப் பிரியா (உடுப்பிட்டி), திருமதி.பரமேஸ்வரன் சுதேஸ்( உடுப்பிட்டி), திருமதி சிவலிங்கராசா தெய்வரதி (கரவெட்டி), செல்வி. ஜெயரதி அருட்செல்வம் (உடுப்பிட்டி), செல்வி.சிந்துஷா மகேஸ்வரன் ( வல்வெட்டித்துறை), செல்வி. வாசுகி பொன்னுத்துரை (நாகர்கோவில்), கணபதிப்பிள்ளை முகுந்தன் (அல்வாய்).

திருமதி.சுதன் ஞானரூபா (பருத்தித்துறை ), செல்வி.விஜியேந்தி சித்திரநாதன் (கரவெட்டி), திருமதி இராஜேஸ்வரி பழனித்துரை( இமையாணன் மேற்கு), கணேசன் வாசுதேவன்(அல்வாய்), தர்மலிங்கம் ரதீஸ்வரன் (உடுப்பிட்டி), திருமதி.நிர்மலராணி தேவராஜா (உடுப்பிட்டி), பொ.சகுந்தலா (யாக்கரு கரவெட்டி கிழக்கு), த.ராஜ்குமார் (கட்டைவேலி), செல்வி.மரியபுஸ்பமலர் ஞானப்பிரகாசம் (நெடுந்தீவு மத்தி

திருமதி .மேரி மக்டலின் அமலோற்பவதாஸ் (நெடுந்தீவு), இராமநாதன் சுதாகரன் ( வேலணை), செல்வி. வில்சன் சுதர்சினி (நெடுந்தீவு), டிகால் பாக்கியநாதன் (நெடுந்தீவு ), செல்வி.சிவபூசணி சிவபாதசுந்தரம் (வேலணை), செல்வி. உமாதேவி ஞானசம்பந்தன் (ஊர்காவற்துறை), செல்வி.யாழினி செல்வேந்திரன் (வேலணை ), செல்வி சம்சித்தி தம்பித்துரை (வட்டுக்கோட்டை).

திருமதி.அருள்ராஜினி சந்திரகுமார் (நெடுந்தீவு ), ஞானரத்தினம் அன்ரன் செல்வராஜ் (புங்குடுதீவு ), செல்வி. சிவநாதன் யாழினி (யாழ்ப்பாணம் ), திருமதி.தனுஜா தேவராசா (பலகாடு, காரைநகர்), செல்வி சோமசுந்தரம் ரேணுகா (காரைநகர் ),செல்வி.சத்தியாம்பிள்ளை மேரி அனஸ்ரா (மண்டைதீவு ), பிலிப்தும் மார்சலின் ஸண் மார்ஸிங் (யாழ்ப்பாணம்), சரவணபவன் சுரதிலகன் (கல்வியங்காடு), செல்வநாயகம் ரஞ்சித்குமார் (கோண்டாவில்).

செல்வி. அமலசெல்வி பத்மராஜன் (எழுவைதீவு),கந்தசாமி குகதாஸ்(பருத்தித்துறை), சிவநாதன் சிவதாஸ் (அல்வாய்), பாலசிங்கம் கிருஷ்ணரூபன் (புலோலி), செல்வி.துஸ்யந்தி கிருஸ்ணபிள்ளை (குடத்தனை), ஆறுமுகம் இராசநிதி (அல்வாய்), யோகதாஸ் அசோக்காந்(அல்வாய்), நடேசன் சிறீதரன் (கரவெட்டி), செல்வி. அணுஜா முருகேசப் பிள்ளை (கரவெட்டி), செல்வி. ஜான்சி சிதம்பரநாதன் (கரவெட்டி), திருமதி. அனுராதா ஜெகநாதன் (கரவெட்டி), நல்லதம்பி நிரஞ்சன் (கரணவாய் மத்தி), திருமதி.ஆனந்தக்கிளி தேவகுமார் (பருத்தித்துறை).

செல்வி வேதநாயகம் டெனிஸ் மேரி (பருத்தித்துறை), திருமதி சோபனா தூயவன் (பருத்தித்துறை ), செல்வி நவநீதராணி சிவகுமார் (புலோலி தெற்கு), வல்லிபுரம் கிருஷ்ணவேல் (பருத்தித்துறை), செல்வி.சிறிவித்தியா சிறியானந்தம் ( புலோலி ), செல்வி சறோஜினி இராஜேந்திரம் ( புலோலி), திருமதி பரமேஸ்வரி அனோஜிதன் (புலோலி மேற்கு ) திருமதி. முரளிதரன் சகா யமேரி (கரவெட்டி), தவேந்திரன் வித்தியா னந்தன் (பருத்தித்துறை), திருமதி. தயாநிதி சசிகரன் (பருத்தித்துறை), செல்வி. துரைராச சிங்கம் கலைச்செல்வி ,(பருத்தித்துறை), திருமதி சிறிதரன் உஷா (புலோலி), செல்வி அனுஷியா மகேந்திரன் ( புலோலி வடமேற்கு), செல்வி. பத்மசுதர்சினி கிருஸ்ண கோபால் (கரவெட்டி ) ,செல்வி. வில்லியம் அன்ரன் மேரி சுரேகா (பருத்தித்துறை).

செல்வி. சிவானந்தராஜக்குருக்கள் ரூபா (பருத்தித்துறை), திருமதி. நளாயினி அரவிந்தன் ( பருத்தித்துறை), செல்வி. இரத்தினம் குமுதா (புலோலி), செல்வி. நர்மலா நடராசா (கொடிகாமம்), சீவரத்தினம் சிவநேசன் (அல்வாய் ), செல்வி. சிந்துஜா ஸ்ரீகோபாலன் ( கரவெட்டி), திருமதி இராஜினி ரஜனிகாந் (அம்பன், குடத்தனை).

செல்வி.ரதிதேவி கணபதிப்பிள்ளை (அம்பன், குடத்தனை), திருமதி. தயானந்தன் கலாநிதி (அம்பன், குடத்தனை), யேசுதாசன் தவக்குமார் (வசாவிளான்), குகதாஸ் ஜெயந்தன் (குடத்தனை),திருமதி .துஸ்யந்தி ராஜசங்கர் (அல்வாய் தெற்கு ), திருமதி சந்திரகுமார் பாமினி (கரவெட்டி ), திருமதி விஜிலிங்கேஸ்வரன் (அல்வாய்).

தவனேஸ்வரன் சுபாஸ் (அல்வாய்), செல்வி. துரைராஜா காயத்திரி (வல்வெட்டித்துறை), செல்வி.ஜெசிந்தா பாமினி இரத்தினசிங்கம் (வல்வெட்டித்துறை), செல்வி.செல்வசபாபதிப்பிள்ளை சிவநந்தினி ( வல்வெட்டித்துறை ), பரஞ்சோதி சசிவண்ணன் (அல்வாய்), திருமதி .சத்தியேந்திரா பாரதி (வல்வெட்டித்துறை), திருமதி.ராஜ்மனோகரன் கமலினி (வல்வெட்டித்துறை).

செல்வி.நீருபா தங்கவேலு (வல்வெட்டித்துறை), செல்வி ஸ்ரீகௌரி சிவலிங்கம் ( அல்வாய்), செல்வி. வத்சலா திருமேனி (வல்வெட்டித்துறை ), திருமதி. நந்தா மணிராஜன் ( வல்வெட்டித்துறை ), செல்வி. தயானி தவராசா (வல்வெட்டித்துறை ), செல்வி.சுந்தரலிங்கம் தர்சினி (வல்வெட்டித்துறை), செல்வி. ஜெயச்சந்திரன் வக்சலா (வல்வெட்டித் துறை), செல்வி. பிறேமினி அழகையா (புலோலி கிழக்கு).

திருமதி. பிரியதர்சினி ஜெயரூபன் (பருத்தித்துறை),செல்வி.சாந்தினி பேரம்பலம் (கரவெட்டி),செல்வி. ஜெயந்தி தங்கராசா (அல்வாய்), செல்வி. மதனரூபி பாரதிதாசன் ( அல்வாய் ), திருத்துவராசா. திவாகரன் (அல்வாய் வட மேற்கு), திருமதி சிவசாந்தி சிவம் (இமையாணன், உடுப்பிட்டி), சிவபாதராஜா ராஜீவ் (அல்வாய் தெற்கு ), செல்வி.யயந்தி தர்மகுலசிங்கம் (வல்வெட்டித்துறை), கந்தசாமி ஸ்ரீதரன் (வல்வெட்டித்துறை ),திருமதி.செல்வநாயகம் சுபா (கரவெட்டி).

திருமதி. செல்வநாதன் பிரதீபா (வல் வெட்டித்துறை), செல்வி.சுஜாதா சாமிநாதர் (பருத்தித்துறை ), பஞ்சவர்ணம் தயாளதாஷன் (தொண்டைமானாறு), செல்வி. கீதாஞ்சலி மகா தேவன் (தொண்டைமானாறு), மதுராம்பிகை சிவானந்தம் (கரணவாய் மேற்கு),செல்வி. சுதர்சினி பாலச்சந்திரன் ( வியாபாரி மூலை பருத்தித்துறை ), செல்வி.ஸ்ரீதரன் நித்தியா (பருத்தித்துறை), வேலுப்பிள்ளை திருக்குமரன் (பருத்தித்துறை).

முற்றும்







நவோதய தினத்தின் சுற்றாடல் விழிப்புணர்வு தினம் நேற்றுமுன்தினம் யா/ வேலணை மத்திய கல்லூரியில் நடை பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மத்திய சுற்றாடல் அதிகார சபை உதவிப் பணிப்பாளர் திருமதி விஜிதா சத்திய குமார் மரம் நடுவதையும் கல்லூரியின் அதிபர் உரையாற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# எண்ணெயை கைவிட்டால் மாரடைப்பைத் தடுக்கலாம்

பொதுமக்களிடம் தற்போது மாரடைப்பு, இதய நோய்கள், இரத்தக் குழாய்களில் அடைப்பு போன்ற பல நோய்கள் ஏற்பட மூலகாரணமாக இருப்பது எண்ணெய் தான் ! சென்னை இதய நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் எம். விஜயகுமார் இதுபற்றி கூறு கிறார்.

பிறவியில் ஏற்பட்ட கோளாறுகள் காரணமாகவும் இதய வால்வுகளில் ஏற்படும் நோய்கள் காரணமாகவும் இதய தசைகளில் ஏற்படும் நோய்கள் காரணமாகவும் பொது மக்கள் பெரிதும் அஞ்சுகிற பரவலான நோய் இதய நாள நோயாகும். (கரோனரி ஆர்டரி டீசீஸ்) இந்த நாளங்கள் தான் இதயத்துக்கு இரத்தம் வழங்குகின்றன.

பொதுவாக இந்த இரத்த நாளங்களின் உள் பகுதியில் கொழுப்பு படிவங்கள் உருவாகிற காரணத்தால் இரத்த நாளங்கள் சுருங்கி இரத்த ஓட்டத்தை தடை செய்வதால் இந்த நோய் ஏற்படுகிறது. இரத்த நாளங்களில் கொழுப்பு படிந்ததால் போதுமான அளவு இரத்தம் ஓட்டம் ஏற்படாமல் போய் விடுகிறது.

அடுத்து ஆஞ்சினா பெக்டோரிஸ் அதாவது மார்பின் நடுப்பகுதியில் வலி ஏற்படுதல் இத்தகைய வலி சற்று ஓய்வு எடுத்தவுடன் போய்விடும் சில நேரங்களில் தாடை எலும்பு கைகளுக்கும் பரவும் ஆஞ்சினா பென்டோரிஸ் என்ற இந்த நோய் இரத்த நாளங்கள் மூலம் வழங்கப்படும் இரத்தத்தின் அளவு குறையும் நேரத்தில் ஏற்படும்.

அடுத்து நிலையற்ற ஆஞ்சினா என்ற மூச்சுத் திணறல் உணர்வு அல்லது மூச்சுத் திணறல் வலி மாரடைப்பு ஆகியன மாரடைப்பால் ஏற்படும்.

இந்த நோய்களுக்கு பல காரணங்கள் இருக்கின்றன. அதில் புகை பிடித்தலுக்கு அடுத்து எண்ணெய் பெரும் பங்குவகிக்கிறது. அதனால் எண்ணெய் உணவுகளை தவிர்ப்பது நல்லது.!

**தடுக்கும் வழிகள்:**

இந்த நோய் வராமல் தடுப்பது நமது கையில் தான் இருக்கிறது. நமது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டும். குறிப்பாக இந்த நோய் இல்லாதவர்கள், நோய்க்கான அறிகுறி இல்லாதவர்களும் இந்த நோய் தங்களுக்கு வந்துவிடாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும்.

✦ புகைப்பிடிக்காமல் இருப்பது


✦ உடல் பருமன் இல்லாமல் பார்த்துக் கொள்வது

✦ இரத்தக் கொதிப்பு கட்டுக்குள் வைப்பது

✦ நீரிழிவு வந்தால் கட்டுக்குள் வைப்பது

✦ அதிக கொழுப்பு இல்லாத உணவு உட்கொள்ளுதல்

ஆகியன!!




இவையெல்லாம் உணவு முறை மற்றும் உடற்பயிற்சியால் மட்டுமே முடியும். சிலருக்கு இந்த நோய் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இது வருவதற்கான அறிகுறிகள் இருக்கலாம். இத்தகையவர்கள் உடனடியாக புகைப்பிடிக்கும் பழக்கம், எண்ணெய் உணவுகளை கைவிடுதல் ஆகியன நல்லது!! உடல் எடையையும் குறைக்க வேண்டும்.

**உணவுமுறை**

❖ நமது உணவு வகைகள் நிச்சயமாக இதய நோய்களைத்தடுக்க பெரும் உதவிகரமாக இருக்கும். குறைந்த கொழுப்புச் சத்துள்ள உணவு வகைகள், அதிகளவு பழங்கள் , காய்கறிகளைச் சாப்பிட வேண்டும்.

❖ ஏற்கனவே இதயநோய் உள்ளவர்கள் , சிகிச்சை பெற்று வருபவர்கள், இதய சிகிச்சை டாக்டர், உணவு வகை நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்று அதற்கேற்ப நமது உணவு வகைகளை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

❖ மிகவும் எளிமையான வழிமுறை என்னவென்றால் எவ்வளவு முடியுமோ அந்தளவுக்கு எண்ணெய்யை அது எந்த எண்ணெய்யாக இருந்தாலும் தவிர்க்க வேண்டும். எண்ணெய்யைப் பயன்படுத்தி சமைத்த பொருட்களை தவிர்க்க வேண்டும்.

❖ இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்களை தவிர்க்க வேண்டும்.ரிபைன்டு மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு வகை களை தவிர்க்க வேண்டும்.பழவகைகள் , காய்கறிகள் சாப்பிடும் அளவை அதிகரிக்க வேண்டும்.

**உடற்பயிற்சி**

❖ நடைப்பயிற்சி தான் உடற்பயிற்சியில் மிக சிறந்ததாகும்.சைக்கிள் ஓட்டுவதும் சிறந்தது.தினமும் காலையிலோ , மதியமோ, மாலையிலோ வெறும் வயிற்றில் இடைவிடாமல் 30 முதல் 45நிமிடங்கள் வாரத்துக்கு குறைந்தது 5 நாட்களாவது நடக்க வேண்டும்.

❖ இதைவிட சாலச்சிறந்தது யோகா பயிற்சி! இதய நோயாளிகள் தங்கள் உடற்பயிற்சி முறையை டாக்டரின் ஆலோசனை பெற்று வகுத்துக் கொள்ள வேண்டும்.அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டர் பரிந்துரை செய்தால் இதய நாள நோயாளிகள் யோகா செய்வதும் பலனளிக்கும்.

❖ மொத்தத்தில் இதய நோய் வராமல் தடுப்பது உங்களிடம் தான் இருக்கிறது.

# சூடான தேநீர் குடிப்பவரா நீங்கள்? கவனம் காய்ச்சல் வந்து விடும் !

சூடான தேநீர் குடிப்பவரா நீங்கள்? அப்படி என்றால் இனி கொஞ்சம் சூட்டை குறைத்துக்கொண்டு விடுங்கள்!

“ மிகவும் சூடாக டீ குடிப்பதால் உணவுக் குழாய் கான்சர் வரும் ஆபத்து அதிகமாக இருக் கிறது” என்று இந்திய மருத்துவ நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு முடிவை சர்வதேச நிபுணர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

காபி, டீ மற்றும் சில வகை பானங்களை சூடாக சாப்பிடுவதை பலரும் விரும்புகின்றனர். சிலர் தன், நன்றாக சூடு ஆறிய பின் குடிக்கும் பழக்கம் கொண்டுள்ளனர். இது ஒரு வகையில் உடலுக்கு மிகவும் நல்லது என்று தெரிகிறது.

தென்மாநிலங்களில் குறிப்பாக தமிழ் நாட்டில் தான் காபி குடிக்கும் பழக்கம் பரவலாக



உள்ளது. காஷ்மீர் முதல் கன்னியாகுமாரி வரை எடுத்துக் கொண்டால் எவருமே டீ குடிப்பதை தான் விரும்புகிறனர். காலையிலும் டீ குடித்தால் தான் பத்திரிகையையே படிக்கத் தோன்றும் சிலருக்கு: இன்னும் சிலருக்கு படுக்கையிலேயே டீ வந்தாக வேண்டும். “பெட் டீ” குடித்த பின் தான் திருப்பள்ளியெழுச்சி நடக்கும். அந்த அளவுக்கு டீ மோகம் உள்ளது.

“காலையில் எழுந்தாலும் சரி, மற்ற நேரங்களிலும் சூடா ஒரு டீ குடித்தல் போதும்... உடல் இன்ஜினுக்கு பெற்றோல் போட்ட மாதிரி; அப்புறம் தான் வேலையே ஓடும்” என்று பலர் குறிப்பிடுவதை கேட்டிருப்பீர்கள். அலுவலகத்தில் வேலை செய்வோரும் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களும் மணிக்கொரு தரம் டீ குடித்தால் தன் சோர்வு நீங்கியது போல உணர்வர்; தம்மாத்துண்டு டம்ளரில் கொடுத்தாலும் அதைக் குடித்தால் தான் சுறுசுறுப்பே வரும்.

அதிக சூடாக டீ குடிப்பதால் ஏற்படும் உடல் கோளாறு பற்றி கடந்த சில ஆண்டாக மேற்கொண்டு வந்த ஆயிவில் இந்திய நிபுணர்கள் ஆபத்தான சில உண்மைகளை கண்டு பிடித்துள்ளனர்.

ஆய்வு முடிபுகளில் அவர்கள் கூறியிருக்கும் சில தகவல்கள்:

✦ வாய் முதல் இரைப்பை வரை உள்ள உணவுக் குழாய் மிகவும் மிருதுவானது. குறிப்பிட்ட அளவில் தான் சூட்டை அது தாங்கும். அதிகமானால். அதன் சுவர் அரிக்க தொடங்கி விடும்.

✦ அதிகமான சூட்டுடன் டீ குடித்தால் உணவுக் குழாய் சுவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றன. அதன் சுவர்கள் அரிக்கப் பட்டு திசுக்கள் பலவீனம் அடைகின்றன.

✦ இதனால், சுவர்ப்பபகுதியில் உணவுக் குழாய் கான்சர் கட்டி ஏற்படும் ஆபத்து உள்ளது.

✦ மற்றவர்களை விட சில பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பவர்களுக்கு கான்சர் ஆபத்து அதிகம்.

✦ பான் பராக், புகையிலை போன்றவற்றை சுவைப்பவர்களுக்கு 1.1 மடங்கு கான்சர் வாய்ப்பு அதிகம்.

✦ பீடி குடிப்போருக்கு 1.8 மடங்கு கான்சர் ஆபத்து உள்ளது.

✦ சிகரெட் பிடிப்போருக்கு இரண்டு மடங்கு கான்சர் அபாயம் உள்ளது.

✦ மது குடிப்போருக்கு கான்சர் அபாயம் 1.8 மடங்கு

✦ அதிக சூட்டுடன் டீ குடிப்போருக்கு, கன்சர் வரும் வாய்ப்பு இவர்களை விட நான்கு மடங்கு அதிகமாக உள்ளது.

✦ வெயில் பருவத்தை விட குளிர் காலத்தில், குளிர் பிரதேசத்தில் உள்ளவர்கள் சூடாக டீ குடித்தால் அவர்களுக்கு இந்த வாய்ப்பு அதிகம். (தொடரும்)




# தொற்று நோய் அபாயத்தை சமாளிக்க...

இனி மழைக்காலம் என்பதால் தொற்று நோய்கள்... நம்மைத் தொற்றிக் கொண்டே இருக்கும். தெற்று நோய்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதாக பரவி விடும். பக்டீரியாக்களால் பரவுவதும் வேறு உயிரிகளாலும் தொற்று நோய்கள் உண்டாகின்றன.

✦ ஜலதோஷம், தட்டம்மை, அம்மைக் கட்டு,சின்னம்மை மற்றும் காசநோய் தாக்கியவர்கள் இருமுவதால்,காற்றின் மூலம் அந்த நோய் அடுத்தவருக்கு தொற்றுகிறது.

✦ அசுத்தமடைந்த காயங்களால் தசை விறைப்பு பரவுகிறது.

✦ [illegible]க்கள் அசுத்தமான கைகள் மற்றும் தண்ணீரால் வயிற்றுப் போக்கு ஏற்படுகிறது.

✦ தொடுவதால் அல்லது துணிக ளால் படர்தாமரை,சேற்றுப்புண் போன்ற தொற்றுகள் ஏற்படுகின்றன.



எனவே மழைக்காலத்தில் சுத்தம், சுகாதாரமாக நாம் இருந்தால் கண்டிப்பாக தொற்று நோய்களிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். மழை நீரில் நடப்பது,நனைவது,உடலை கழுவாமல் அல்லது குளிக்காமல் வீட்டுக்குள் நுழைவது ஆகியவை எளிதாக தொற்று நோய்களை அழைத்து விடும். அதேபோல் தெருவோரம் சாப்பிடுவது கூடாது. குறிப்பாக உணவுப் பொருட்கள் மீது ஈக்கள், கொசுக்கள் மொய்க்காமல் கவனித்துக்கொள்ளுங்கள்.

## இலங்கை தமிழர்களின் உண்மை நிலைமை கண்டறிய

# பா.ஜனதா கூட்டணி கட்சிகள் விரைவில்

# இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளன

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர்களின் உண்மை நிலையை கண்டறிய பா.ஜனதா கூட்டணி கட்சிகள் அடங்கிய குழு விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

இலங்கையில் போர் முடிவடைந்து ஓர் ஆண்டுக்கு மேலாக ஆகியும் இலங்கை தமிழர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் சரியாக சென்றடைகிறதா என்பது கேள்விக்குறியாக வுள்ளது. இன்னும் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேலான தமிழர்கள் அரசு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் அரசு முகாம்களில் இருந்து அவர்களது சொந்த இடங்களுக்காக அழைத்து செல்லப்பட்டவர்கள் வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வந்தவண்ணம் உள்ளன.

மத்திய மற்றும் தமிழக அரசால் வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைந்த்தா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. எனவே இலங்கையில் தமிழர்களின் உண்மை நிலையை கண்டறிய அனைத்துக்கட்சி தலைவர்களைக்கொண்ட குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என பா.ஜனதா மற்றும் இடது சாரிகள் சார்பாக பாராளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டது ஆனால் மத்திய அரசு அதை நிராகரித்து விட்டது.

தற்போது காஷ்மீரில் நடைபெற்று வரும் நிகழ்வுகளை கண்டறிய மத்திய அரசு அனைத்து கட்சி குழுவொன்றையும் அந்தக் குழுவுடன் பத்திரிகையாளர்களையும் அனுப்பி வைத்துள்ளது.

அதேபோல் பா.ஜனதா தலைமையில் விரைவில் ஒரு குழு இலங்கைக்கு சென்று அங்குள்ள உண்மை நிலவரத்தை ஆராய்ந்து மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்க இருப்பதாக பா.ஜனதா வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

பா.ஜனதா தலைமையிலான இக் குழுவில் ஐக்கிய ஜனதா தளம் அகாலிதளம் சிவசேனா மற்றும் சில தமிழக கட்சிகளும் இடம் பெறலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)



உ.பி. மாநிலம் மொராதாபாத்தில் உள்ள கலாகர் அணை நேற்று திறக்கப்பட்டது. இதனால், ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவரை கிராம மக்கள் மீட்கின்றனர்.

## அகதிகளை அவுஸ்திரேலியா அழைத்துச் செல்ல முயன்றவர் கைது

திருச்சி உள்ளிட்ட பல்வேறு முகாம்களில் இருந்து இலங்கை அகதிகளை அவுஸ்திரேலியா அழைத்துச் செல்ல திட்டமிட்டிருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அவுஸ்திரேலியா செல்ல் முயன்ற அகதிகள் மீண்டும் முகாமிற்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். தமிழகத்தில் மண்டபம் ,வேலூர் ,திருச்சி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இலங்கை அகதிகள் முகாம்கள் உள்ளன.இவற்றில் உள்ள அகதிகளை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்லஒரு கும்பல் திட்டமிடுவது குறித்து திருச்சி கியூ பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

கியூ பிரிவு மற்றும் பொலிஸார் நேற்று முன்தினம் கொள்ளிடம் டோல்கேட் அருகில் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அவுஸ்திரேலியா செல்லும் எண்ணத்துடன் ஒரு பஸ்ஸில் பல்வேறு முகாம்களில் இருந்து வந்த 37 அகதிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். அதற்கான ஏற்பாடுகளை செய்த சுதா என்பவரை பொலிஸார் கைது செய்தனர்.பஸ்ஸில் வந்த 37 அகதிகளும் அவரவர் முகாம்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். (ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்

## அயோத்தி வழக்கில் இந்துக்களுக்கு சாதகமாக தீர்ப்பு அமைய வேண்டி சிறப்பு யாகம்

அயோத்தி வழக்கில் இந்துக்களுக்கு சாதகமாக தீர்ப்பு வர வேண்டும் என்று வேண்டி இராமேஸ்வரத்தில் சிறப்பு யாகம் நடைபெற்றது.

அயோத்தியில் இராமர் கோயில் பிரச்சினை தொடர்பாக டில்லி உச்ச நீதி மன்றத்தில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக வழக்கு நடைபெற்று வருகின்றது. இந்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 24 ஆம் திகதியன்று வழங்கப்படவுள்ளது.

நாடே ஆவலாக எதிர்பார்க்கும் இந்த வழக்கின் தீர்ப்பு இந்துக்களுக்கு சாதகமாக அமைய வேண்டி இராமேஸ்வரத்தில் அபய ஆஞ்சநேயர் கோவிலில் சந்திரசேகர சர்மா தலைமையில் 21 வேத விற்பன்னர்களால் மகா ஸ்ரீ அனுமன் யாகம் நடத்தப்பட்டது.

இந்த யாகத்தின் பா.ஜ.க. தேசிய செயற்குழு உறுப்பினர் முரளீதரன், இந்து முன்னணி மாவட்டச் செயலாளர் இராம மூர்த்தி மற்றும் ஆர். எஸ்.எஸ். பொறுப்பாளர் தெட்சிணாமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை மத்திய அரசுக்கு எதிரான போராட்டம் தொடரும்

# பிரிவினைவாத இயக்கங்கள் அறிவிப்பு

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மக்களின் முக்கிய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை மத்திய அரசுக்கு எதிரான போராட்டம் தொடரும் என்று முக்கிய பிரிவினைவாத் தலைவர்களில் ஒருவரான சையத் அலிஷா கிலானி தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மாநிலத்திற்குச் சென்றுள்ள அனைத்துக் கட்சிக்குழுவின் ஒரு பிரிவு கிலானியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

அப்போது போராட்டத்தை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைக்கு வருமாறு அனைத்துக் கட்சி குழு சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. இந்நிலையில் தொலைக்காட்சி ஒன்றிற்கு கிலானி அளித்துள்ள பேட்டியில் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியிலிருந்து ஆயுதப் படை அதிகாரிகளுக்கான சிறப்பு அதிகார சட்டத்தை மத்திய அரசு வாபஸ் பெற வேண்டும் .

அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட ஐந்து நிபந்தனைகளை நிறைவேற்றினால் மட்டுமே பேச்சுவார்த்தை பலனளிக்கும் என்று கூறியுள்ளார்.

இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் வரை முன்னர் அறிவித்தது போன்று காலை 7 மணி முதல் மாலை 7 மணிவரை மத்திய அரசுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்கள் தொடரும் என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.



இதனிடையே ப.சிதம்பரம் தலைமையில் சென்றுள்ள அனைத்துக் கட்சிக்குழு அங்கு அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

இதேவேளை காஷ்மீரின் முக்கிய எதிர்க் கட்சியான பி.டி.பி. கட்சியின் தலைவர் மெஹபூபா முக்தி சந்திக்க மறுத்துவிட்டார் மாறாக தனது கட்சி சார்பில் 15 பிரதிநிதிகளை அவர் அனுப்பினார்.

அண்மைக்காலமாக நிகழ்ந்து வரும் வன்முறைச் சம்பவங்களுக்கு உமர் அப்துல்லாவின் அரசை கடுமையாகக் குற்றம் சாட்டினார்.

மெஹபூப் ப.சிதம்பரம் தலைமையிலான அனைத்துக்கட்சி குழுவினர் அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுமக்களையும் சந்தித்து கலந்தாலோசிக்கவுள்ளனர். இக் குழுவுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. காஷ்மீர்ப் பள்ளத்தாக்கில் பல இடங்களில் கடுமையான ஊரடங்கு உத்தரவு அமுலில் தொடர்கிறது.


இதனிடையே சோபூரில் நடந்த மோதலில் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உள்ளூர் வாசி ஒருவர் பலியானதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக ஸ்ரீநகர் வந்திறங்கிய நிருபர்களிடம் பேசிய ப.சிதம்பரம் நாட்டின் ஓர் அங்கமாக திகழும் காஷ்மீர் மக்களின் எதிர்காலம் இந்தியாவுடன் சேர்ந்து இருந்தால்தான் பாதுகாப்பாக இருக்கும் காஷ்மீர் மக்களின் எதிர்காலம் கெளரவம் மரியாதை ஆகியவை இந்தியாவுடன் இருப்பதாலேயே பாதுகாப்பாக உள்ளது என்று கூறினார்.

(ஸ்ரீ-2)

# நம்பி வரும் அடியவரை காத்தருள வல்லிபுர மாயவன் தேரேறி வருகிறான்

## வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா இன்றாகும்



மூர்த்தி , தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒரு ங்கே அமைந்து பெரும் சிறப்புப் பெற்றது துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருத்தலமாகும். இங்கு வல்லிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு'' ஆழ் வார்'' திருநாமமே பன்னெடுங் காலமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆலயத்தின் வரலாறு தட்சண கைலாச புராணம், தட்சயண கைலாச மான்மியம் (வல்லிபுர வைபவம்) நகுல மலைக் குறவஞ்சி,திருக்கேதீஸ்வர புராணம் என்னும் நூல்களில் பெரிதும் பேசப்பட்டுள்ளது. இன்னும் சிங்கள மொழியிலுள்ள ''கோகுல சந்தேச'' என்னும் பிரபந்தம் வல்லிபுரம்,பொன்னாலை என்னும் இரு தலங்களையும் பற்றி விசேடமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதும் சிறப்பம்சமாகும்.

வல்லிபுரக் கோயிலைச் சூழவுள்ள மணற்பகுதிகள் புராதன காலத்தில் மிக உன்னத நிலையிலிருந்த ஓர் இராசதானி என்பது ஆய்வாளர் பலருடைய கருத்தாகும். '' வல்லிபுரம்'' ஓர் துறைமுகமாக இருந்தது மட்டுமல்ல. தலைநகராயுமிருந்தது என்பதற்கான புதைபொருட் சின்னங்கள் கவனத்துக்குரியதாகும்.

கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் கலிங்க அரசன் உக்கிரசிங்கன் கதிரமலையரசைப் பற்றி மாருதப்புரவீக வல்லியெனும் சோழகு மாரியை மணந்து பின்னர் கதிரமலையை விட்டு நீங்கி சிங்கை நகரை இராசதானி யாக்கினான்.

பருத்தித்துறைக்கு அண்மையில் மணல் மோடுகள் உள்ள வல்லிபுரமே சிங்கை நகரமாகப் பண்டைக் காலத்தில் விளங்கியது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகீழ்ப் பகுதியை அண்டிய கடற்கரையை தனது தீர்த்தக் கரையாகக் கொண்டு விளங்குவது இவ்வாலயமாகும்.

மூலஸ்தானத்தின் சக்கரமானது இறைவனை விட்டுப் பிரியாதவர். சுதர்சனமே விஷ்ணுவாகும். விஷ்ணுவே சுதர்சனமாகும். சுதர்சனச் சக்கரமானது இறைவனைப் போலவே ஆதி அந்தம் எதுவுமில்லாததா கும். அரங்கனாக விளங்குகின்ற கிருஷ்ண் பரமாத்மாவின் கையில் இருப்பது தான் இந்தச் சக்கரம்.

இந்தத் தர்மச் சக்கரத்தைக் கொண்டு அவன் அனைத்தையும் காத்து வருகிறான். அறம் செய்கின்றவர்களை ஆழி காப்பாற்றுகின்றது. கேடு செய்கின்றவர்களை அது துன்புறுத்துகின்றது. சக்கரத்துக்கு மறைந்திருந்து யாரும் எச்செயலும் செய்ய முடியாது.

இத்தனை காவல் தெய்வத் திருவடிவாகச் சக்கரம் சக்கரத்தாழ்வாராக வழிபடப்படுகின்றது.'' மாயோன் மேயக் காடுரை உலகமும்'' எனக் தொல்காப்பியம் கூறும் திணைவழுத் தெய்வம் மாயவன் எனக் சரளமாகப் பேசப்படுகிறது. ஆழ்வார் என்ற நாமம் பூண்டவர்கள் இக்கிராமங்களில் இன்றும் வாழ்கிறார்கள்.

''கோவிந்தா கோபாலா'' என்ற நாமம் சொல்லி இளைஞர்கள் இணைந்து தங்கள் தோள்களிலே மாயவனை சுமந்து செல்கின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

வல்லிபுர மாயவனின் மஹோற்சவங்களில் திருத்தேர் உற்சவத்தை காண வருகின்ற அடியவர்கள் ஏராளம். மச்சய அவதாரமாக தோன்றிய மூர்த்தியல்லவா? மாயவன் ஆழிப்பிரானாக நீர் கடலானாக பல விருட்சங்கள் சூழ்ந்த இயற்கை எழில் மத்தியில் கோயில் கொண்டுள்ளான்.

இன்றைய தினம் வல்லிபுர மாயவர் திருத்தேரில் ஆரோகணித்து எல்லா அடியவர்களையும் அரவணைத்து காவல் செய்கிறார்.

மதுரகவி காரை
எம்.பி.அருளானந்தம்.

## கருத்தரங்கு

வடமராட்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடம் கற்பிக்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை யா/மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் நவீன வளர்ச்சியினையும் அதன் நவீன பயன்பாடுகளையும் மாணவர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு கருத்தரங்குகளை நடத்துவ்தற்கும் ஊக்குவிப்பு போட்டிகளை நடத்துவதற்கும் சுவிற்சர்லாந்திலிருந்து வெளிவரும் **கணனி களம்** என்ற சஞ்சிகை நிர்வாகம் முன் வந்துள்ளது. இந்நோக்கத்தின் அடிப்படையில் மேற்படி சஞ்சிகையின் ஆசிரியர் குழாம் ஒன்று இக் கருத்தரங்கை நடத்தவுள்ளது.


தரம் 10 இல் தகவல் தொழில்நுட்ப பாடம் கற்கும் மாணவர்களை இக்கருத்தரங்கில் பங்கு கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-7-19)

# இலங்கையின் அபிவிருத்தி பணிகளுக்கு கட்டார் உதவும்

## கலீபா அல்தானி ஜனாதிபதியிடம் உறுதி

இலங்கை முன்னெடுத்துச் செல்லும் அபிவிருத்திப் பணிகளுக்கு கட்டார் அரசாங்கத்தின் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என கட்டார் அமீர் கலீபா அல்தானி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 65ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றடைந்துள்ள ஜனாதிபதி நேற்று கலீபா அல்தானியை சந்தித்து உரையாடிய நலன்கள் பற்றியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினவியபோது அவர்களின் பிள்



போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் எரிவாயு உற்பத்திக்கு கட்டார் பூரண ஒத்துழைப்பு வழங்கும் என் றும் இரு நாடுகளுக்குமிடையில் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கலீபா அல் தானி தெரிவித்தார்.

கட்டாரில் தொழில் புரியும் 95 ஆயிரம் இலங்கையர்கள் பற்றியும் அவர்களின் சேம

ளைகளின் கல்விக்காக தனியான பாடசாலையொன்றை ஆரம்பிக்கவும் கலீபா அல்தானி இணக்கம் தெரிவித்தார்.

இலங்கையில் இப்போது சமாதான சூழல் நிலவுவதால் கட்டார் வர்த்தகர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்புகின்றனர். என்றும் அதற்கு ஜனாதிபதி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கலீபா அல்தானி கோரிக்கைவிடுத்தார். (ஸ்ரீ-2)

# பொன்சேகாவுக்கு மன்னிப்பு வழங்குவதன் மூலம் மஹிந்த பெருந்தன்மையை வெளிப்படுத்த முடியும்

## த ஹிந்து நாளிதழ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு இராணுவ நீதிமன்றம் வழங்கியுள்ள மூன்று வருட சிறைத் தண்டனையை உறுதிப்படுத்தாமல் விடுதவதன் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது பெருந்தன்மையை காட்ட முடியும் என த.ஹிந்து நாளேடு குறிப்பிட்டுள்ளது.

இராணுவத் தளபாட கொள்வனவில் ஊழல் தொடர்பாக இரண்டாவது இராணுவ நீதிமன்றம் சரத் பொன்சேகாவுக்கு மூன்று வருடகால சிறைத்தண்டனையை கடந்த வெள்ளிக்கிழமையன்று வழங்கியுள்ளது.

ஏற்கனவே முதலாவது இராணுவ நீதிமன்றத்தின் மூலம் அவருடைய பதவிகளும் பதக்கங்களும் பறிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இரண்டாவது நீதிமன்றத்தின் மூலம் அவருக்கு வழங்கப்பட்டுள்ள மூன்று வருட சிறைத்தண்டனையை வழங்காமல் இருப்பதன் மூலம் ஜனாதிபதி இழந்து விடபோவது எதுவும் இல்லை என சுட்டிக்காட்டியுள்ள த ஹிந்து நாளிதழ் சரத் பொன்சேகாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதன் மூலம் ஜனாதிபதியின் அரசியல் பெருந் தன்மையை மேம்படுத்திகொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

ஒழுக்கமே அனைத்தையும் பெற்றுத்தரும். வாழ்வையும் பாதுகாக்கும். ஒழுக்கத்தில் சிறந்த மனிதன் என்று பேர் வாங்கவேண்டும்.

– காந்திஜி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# உங்கட பிள்ளையள் எங்க போகினம்...

யாழ்குடாநாட்டின் கலாசார சீரழிவுகள் குறித்து பலரும் வேதனை வெளியிட்டு வருகின்றனர்.

சிலரோ ஐயா! என்ன கலாசார சீரழிவு. எல்லாம் முன்பும் நடந்த விடயங்கள்தான். நாம் மறந்து விட்டோம் அவ்வளவுதான் என்று ஆறுதல் அடைகின்றனர்.

இருந்தும் எங்களின் களநிலை, கலாசார சீரழிவை தூண்டுபவையாக இருப்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

ஏ-9 பாதை திறந்த பின்னான இரவுநேரப்பயணம், புலிப்பயத்திலிருந்து நீங்கிக் கொண்டமை, இரவுநேர இசைக்கச்சேரிகள் , தென்பகுதி மக்களின் அதீத வருகை, விடுதிகளின் பெருக்கம் என்பவை கலாசாரச் சீரழிவுகளை ஏற்படுத்துவதற்கு ஊக்கம் தருகின்றன.

இதேவேளை தியேட்டர்களிலும் இச்சீரழிவுகள் தாண்டவமாடுவதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருப்பது குறித்தும் நாம் கவனமற்றவர்களாக இருக்க முடியாது.

எனவே கலாசார சீரழிவுகளை தடுத்து-தவிர்த்து எங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு ஆரோக்கியமாகவும் எங்கள் தமிழ்ப் பண்பாட்டின் உன்னதமான குடும்ப உறவு சீராகவும் அமைவதற்கான வழிவகைகளைச் செய்வது கட்டாயமானதாகும்.

அதேநேரம் கலாசாரச் சீரழிவு என்பதின் பின்னணியில் அறியாமையும் தவறான வழிநடத்தல்களும் குடும்ப சமூகப்பின்னணிகளும், சந்தர்ப்பங்களும் துணைபுரிவதை மறுத்துவிட முடியாது.

ஆக , கலாசாரச் சீரழிவு என்பதனை தடுக்க-தவிர்க்க வேண்டுமாயின், ஒட்டுமொத்த கலாசாரச் சீரழிவு என்று குழம்பிக்கொள்ளாமல் அதனை கூறுபோட்டுப் பார்க்கும் போது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தொடர்பில் விழிப்பாக இருப்பது கலாசாரச் சீரழிவை வேரறுக்க ஒரே வழி என்ற முடிவு தெரியவரும்.

ஆகவே முதலில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நடவடிக்கை தொடர்பில் "நம்பிக்கை" அடிப்படையில் எல்லாம் சரியாக நடக்கும் என்று எண்ணிக்கொள்ளாமல்,

மேற்பார்வையும், கட்டுப்பாடும் அதேசமயம் பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளின் உன்னதமான நண்பர்களாகவும் இருக்கும் பன்மைத்துவ பங்களிப்பை முறையாகச் செய்யவேண்டும்.

என்னுடைய பிள்ளை ரியூசனுக்கு செல்கிறது, என்னுடைய பிள்ளைக்கு ரியூசனுக்கான நேரம் ஒழுங்கில்லை. அதனால் அந்தப்பிள்ளையும் உரிய நேரத்துக்கு வீடு திரும்ப முடிவதில்லை என்ற நினைப்புகளோடு இருப்பது பேராபத்தாகலாம்.

ஆகையால் எதிலும் ஒருகண் இருந்தால், வாழ்வு குறையாத மகிழ்வைத் தரும். பிள்ளைகளும் தங்கள் பெற்றோர் தங்களை வளர்த்த சீர் சிறப்பை பெருமையாகக் கூறி தாமும் தம் பிள்ளைகளின் வளர்ப்பில் அந்த முறையை பிரயோகிப்பர். இதுவன்றோ பேரானந்தம்.

# தேசிய பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு சித்திர-கட்டுரைப்போட்டிகள்

(அல்வாய்)

அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் ஆலோசனை யுடன் அமைச்சரவையினால் ஒவ்வொரு வருடமும் மார் கழி மாதம் 26ஆம் திகதி தேசிய பாது காப்புத் தின மாக பிரகடனப் படுத் தப்பட்டுள் ளது.

இத்தினத்தை யாழ்ப்பாணத்தில் நினைவு கூரும் முகமாக அனர் த்த முகாமைத் துவ நிலையமும் கல்வித்திை ணக்களமும் இணை ந்து பாடசாலை மாணவர்களுக் கும் பிரதேச மட் டத்திலும் கட்டு ரைச் சித்திரப் போட்டிகளை நடத்தவுள்ளன.

கட்டுரைப் போட்டிகள் மூன்று பிரிவுக ளாக நடத்தப்பட வுள்ளதுடன் பிரிவு -1இல் தரம் 7,8,9 மாணவர்களும் பிரிவு -2இல் 10,11 மாணவர்களும் பிரிவு -3இல் தரம் 12,13 மாணவர்களும் பங்கு பற்ற முடியும்.

அத்துடன் போட்டிக்குரிய தலைப்புகளாக **தடுப்போம் அனர்த்தத்தை பாதுகாப்போம் இலங்கையை ,அனர்த்தமில்லாத சூழலும் சிறந்த வாழ்க்கையும்** என்ற விடயங்கள் பற்றி பிரிவு -1இல் 750 சொற்களுக்குக் குறையாமலும் பிரிவு -2 ஆயிரத்து 200 சொற்களுக்கு குறையாமலும் பிரிவு -3 ஆயிரத்து 500 சொற்களுக்குக் குறையா மலும் அமைதல் வேண்டும்.

சித்திரப்போட்டிகள் பிரிவு-1 தரம் 6,7,8,பிரிவு-2 தரம் 9,10,11 ,பிரிவு -3 தரம் 12,13 ஆகிய மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளதுடன் மேற்குறித்த கட்டுரைத் தலைப்பிலே சித்திரமும் வரைதல் வேண்டும்.

மேலும் போட்டிக்கு விரும்பிய கடதாசி வகையையும் வர்ண வகையையும் பயன் படுத்தலாம். அத்துடன் வரைபடத்தின் அளவு 20 அங்குலம் X 18 அங்குலம் உடையதாக வும் இருக்க வேண்டும்.

மேலும் சிறந்த சித்திரங்கள் பாதுகாப்புத் தினத்தன்று கண்காட்சியில் வைக்கப்படவுள் ளது.

சகல வலயப்பணிப்பாளர்கள் தமது வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து சமர்ப்பிக்கப்படும் கட்டுரை ,சித்திரைப்போட் டிக்கான ஆக்கங்களில் ஒரு பிரிவில் தலா 3 ஆக்கங்கள் வீதம் மொத்தமாக மூன்று பிரிவிலும் 9 ஆக்கங்கள் தெரிவு செய்யப் பட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கல்வித்திணைக்களம் யாழ்ப் பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறு குறிப்பிடப்படுகிறது.

மேலும் மேலதிக மாகாணக்கல்வித் திணைக்களம் தனது காரியாலயத்திற்கு கிடைக்கும் ஏனைய வலய மட்டத்தில் 5 கல்வி வலயப் பிரிவுகளில் இருந்து கிடைக் கும் 45 ஆக்கங்களில் ஒரு ஆக்கங்கள் வீதம் 15 ஆக்கங்கள் தெரிவு செய்யப்படும் எனவும் மாகாண கல்வி திணைக் களத்தின் அறிவுறுத் தல்களுக்கு அமைய அமைக்கப் படும் .குழுவின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

வெற்றியீட்டும் மாணவ மாணவிகளுக் கும் பெறுமதி மிக்க சான்றிதழ்களும் பரிசில் களும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சி னால் வழங்கப்படவுள்ளது.

பிரதேச மட்டத்திலான போட்டியாளர்கள் மேற்குறிப்பிட்ட தலைப்புகளில் நிபந்தனைக ளுக்குட்பட்டதாக ஆக்கங்களை மேற்குறிப் பிட்ட முகவரிக்கு தபால் மூலமாகவோ அல் லது நேரடியாகவே ஒப்படைக்கலாம் எனவும் குறிப்பிடப்படுகிறது.

சித்திரங்களும் கட்டுரைகளும் சமர்ப்பிக் கும் போதும் அதிபர், பாடசாலையின் பெயர், மாணவரின் தரம் ஆகியவற்றை உறுதிப் படுத்த வேண்டும்.

மேலும் ஆக்கங்களில் மாணவரின் பெயர், பாடசாலையின் பெயர் என்பவற்றை குறிப் பிடாது தனியான தாளில் எழுதி ஆக்கத்து டன் இணைக்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா.சுகுமார் சகல பாட சாலைகளுக்கும் அறிவித்துள்ளார்.(ஸ்ரீ-4-19)

# வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி குறித்து அமைச்சர் டக்ளஸ் தலைமையில் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் மீள் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ள சகல அரச திணைக்களத் தலைவர்கள் பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளடங்கிய அபிவிருத்தி மேம்பாட்டுக் கூட்டமொன்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தலைமையில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் மாலை மருதங்கேணி பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் மீள் குடியேறும் மக்களின் அத்தியா அவசிய தேவைகள் மற்றும் துறைசார் பிரச்சினைகள் தனித்தனியாக விரிவாக ஆராயப்பட்டன. குறிப்பாக கடற்தொழில் விவசாயம் ஏனைய வாழ்வாதாரத் தொழில்கள், வீதி அபிவிருத்தி, போக்குவரத்துச் சேவை, வீடுகள்அமைத்தல், கிணறுகள் சுத்தம் செய்தல், கல்வி நடவடிக்கைகள், சுகாதாரம், கால்நடை வளர்ப்பு, தபால் சேவை, பல நோக்கு கூட்டறவுச்சங்க நடவடிக்கைகள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுத்துறை அபிவிருத்தி உட்பட ஏனைய துறைசார் விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டன.

வடமராட்சி கிழக்கு பிரதேச மக்களின் பிரதான வாழ்வாதாரத் தொழிலான கடற்தொழில் குறித்து ஆராயப்பட்ட சமயம் கருத்துத் தெரிவித்த பிரதேச படைகளின் கட்டளை அதிகாரியான கேணல் ஜெயதிலக்க இப்பகுதியை தாம் புலிகளிடமிருந்து மீட்டெடுத்த போது சுமார் 60 மீன்பிடிப் படகுகளைத் தாம் கண்டெடுத்து தமது பாதுகாப்பில் வைத்துள்ளதாகவும் அவற்றை உடனடியாக கையளிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (சு)

# இலங்கை இளைஞரை கொல்லுமாறு துபாய் நீதிமன்றம் உத்தரவு

துபாயில் தமது காதலியின் கணவனைக் கொலை செய்த 23 வயதான இலங்கை சிங்கள இளைஞர் ஒருவரை சுட்டுக்கொல்லுமாறு துபாய் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துபாய் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த கொலைவழக்கு சம்பந்தமான விசாரணை கடந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கொல்லப்பட்டவரின் மனைவி தமது கணவர் ஆபிரிக்கர் ஒருவரால் கொல்லப்பட்டதாகக் கூறினார்.

எனினும் சாட்சியங்கள் புஸ்பகுமார என்ற இலங்கையைச் சேர்ந்த இளைஞருக்கும் குறித்த பெண்ணுக்கும் தொடர்புகள் இருப்பதை உறுதிப்படுத்தின.

இதனை அடுத்து மூன்றாவது முறையாக நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த பெண்ணின் கணவர் புஸ்பகுமார என்ற சிங்கள இலங்கையரால் கொலைசெய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்டது.

இதனை அடுத்து அவரை சுட்டுக்கொல்ல துபாய் நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-5)

## திருத்தம்

நேற்றையதினம் வெளியான "வன்னியில் நடந்த பேரவலம் சந்திரமண்டலத்தில் நிகழ்ந்த சங்கதியா?" என்ற ஆசிரியர் தலையங்கத்தின் இறுதிப்பகுதியில் ஐ.நா செயலாளர் கோபி அனான் எனத் தவறுதலாக வெளிவந்துவிட்டது. தயவுசெய்து அதனை ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் எனத் திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



பலவீனத்துக்குப் பரிகாரம் பலவீனத்தை எண்ணுவதல்ல. பலத்தை நினைப்பதுவே.

நாம் மேடையில் பிச்சைக்காரன் வேடத்தில் நடிக்கும் நடிகனைப்போல நடிப்போம். பிச்சைக்காரனாக நடிக்கும் நடிகனையும் உண்மையிலேயே தெருவில் பிச்சை எடுக்கும் பிச்சைக்காரனையும் ஒப்பிட்டு வேறுபாடுகளைக் காணுங்கள்.

இருவரும் பார்வைக்கு ஒன்று போலத்தானிருப்பார்கள் ஆயினும் எத்தனை மாறுபாடு. ஒருவன் இப்படி பிச்சை எடுப்பதன் மூலம் ஆனந்தத்தை அனுபவிக்கிறான். மற்றொருவர் துன்பமும் துயரமும் அடைகிறான்.

எது இந்த வேறுபாட்டை ஏற்படுத்துகிறது? ஒருவன் சுதந்திரன் மற்றவன் கட்டுண்டவன்.

# மியன்மார் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட ஆங்சாங் சூகிக்கு தடை

(யாங்கூன்)



மியன்மார் நாட்டில் எதிர்வரும் நவம்பரில் பாராளு மன்றத் தேர்தல் நடக்கவிருக்கிறது. அதில் அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சான் சூகியை வாக்களிக்க விடாமல் தடுப்பதற்காக அவரது பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து அதிகார பூர்வமாக நீக்கப்பட்டுள்ளது. மியன்மாரில் 1962 இல் இருந்து இராணுவ ஆட்சி நடக்கிறது. இதை ஜனநாயக தேசிய லீக் கட்சியின் தலைவர் ஆங் சான் சூகி எதிர்த்து வருகிறார்.

அவரது கட்சி 1990 இல் பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றது. அதனால் அந்நாட்டு இராணுவ அரசு அவரைக் கைது செய்து 21 ஆண்டுகளாக வீட்டுச் சிறையில் வைத்துள்ளது. இந்நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி அங்கு பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

1990 க்குப் பின் நடக்க உள்ள பொதுத் தேர்தல் என்பதால் அந்நாட்டில் இராணுவ ஆட்சி நீங்கி ஜனநாயகம் மலரும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஆனால் இத்தேர்தல் ஒரு கண்துடைப்பு தான் என அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

அதை உறுதிப்படுத்தும் விதத்தில் ஆங் சான் சூகி இத்தேர்தலில் வாக்களிக்க முடியாது என்பதில் இராணுவ அரசு உறுதியாக இருக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர் பொதுத் தேர்தலில் வாக்களிக்க முடியாது என்பது போன்ற சிறப்பு சட்டங்களை அதிரடியாக நிறைவேற்றியுள்ளது.

அதன் அடுத்த கட்டமாக நேற்று முன்தினம் அந்நாட்டு தேர்தல் குழு அலுவலகத்தில் ஒட்டப்பட்ட வாக்காளர்கள் பட்டியலில் சூகியின் பெயர் இல்லை. அவரை வாக்களிக்க விடாமல் தடுப்பதற்காகத்தான் இராணுவ அரசு அவரது பெயரை பட்டியலில் இருந்து நீக்கியுள்ளது. (ஶ்ரீ-2)

# அமெரிக்கா,சீனாவைத் தொடர்ந்து உலகின் அதிசக்திவாய்ந்த நாடாக இந்தியா

## அமெ.ஆய்வறிக்கை தெரிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்கா, சீனாவை தொடர்ந்து உலகின் அதிக சக்தி வாய்ந்த நாடாக இந்தியா இருக்கிறது என அமெரிக்க ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

குளோபல் கவர்னன்ஸ் 2025 என்ற பெயரில் உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் குறித்த ஆய்வறிக்கையை அமெரிக்காவின் நேஷனல் இன்டெலிஜன்டஸ் கவுன்சில் மற்றும் ஐரோப்பிய யூனியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் செக்யூரிட்டி ஸ்ட்டிஸ் ஆகிய அமைப்புகள் இணைந்து வெளியிட்டுள்ளன.

2010 இல் 22 சதவீத சர்வதேச அதிகாரத்துடன் அமெரிக்கா முதலிடத்தைப் பெற்றுள்ளதாக அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து 16 சதவீத உலக அதிகாரத்தை சீனாவும் ஐரோப்பிய யூனியனும் கொண்டுள்ளன. இந்தியா 8 சதவீதத்தை பெற்றுள்ளது. அடுத்ததாக ரஷ்யா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் 5 சதவீத அதிகாரத்தைப் பெற்றுள்ளன.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் தற்போதைய தர நிலைப் பட்டியலில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லாமல் இருந்தாலும் அமெரிக்கா , ஐரோப்பிய யூனியன், ஜப்பான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் அதிகாரம் சரிந்து விடும்.


அதேவேளையில் சீனா, இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளின் அதிகாரம் குறிப்பிடத்தக்க வகையில் உயரும் என அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025 இல் அமெரிக்கா 18 சதவீத அதிகாரத்துடனும் சீனா 16 சதவீத அதிகாரத்துடனும் ஐரோப்பிய யூனியனிடம் 14 சதவீத அதிகாரத்துடனும் இந்தியா 10 சதவீத அதிகாரத்தையும் கொண்டிருக்கும் என அந்த ஆய்வறிக்கையில் கணிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் காலநிலை மாற்றம், எல்லை பிரச்சினை, புதிய தொழில்நுட்பம் மற்றும் இயற்கை ஆதாரத்தை மேலாண்மை செய்தல் போன்ற விவகாரங்களில் சர்வதேச அளவில் பிரச்சினைகள் வலுவாக வாய்ப்புள்ளது என்றும் ஆய்வறிக்கை எச்சரிக்கிறது. (ஶ்ரீ-2)




# பாகிஸ்தானில் சீனா கட்டும் இராட்சத அணு உலை



(பீஜிங்)

சீனாவும் , பாகிஸ்தானும் நட்பு நாடுகளாக உள்ளன. எனவே பாகிஸ்தானுக்கு சீனா பல வழிகளில் உதவி புரிந்து வருகிறது. உதவி என்ற பெயரில் பாகிஸ்தானில் எல்லைப் பகுதியில் அணு உலைகளை அமைத்து இந்தியாவுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

பாகிஸ்தானில் பஞ்சாப் மாகாணத்தில் ஷாஸ்மா என்ற இடத்தில் ஒரு அணு உலை கட்டிக் கொடுத்துள்ளது. மற்றொரு அணு உலை பணி முடியும் தறுவாயில் உள்ளது.

இந்த நிலையில் தற்போது அங்கு இராட்சத அணு உலை கட்டித்தர சீனா முடிவு செய்துள்ளது. அதற்கான ஆலோசனை இருதரப்பிலும் நடைபெற்று முடியும் தறுவாயில் உள்ளது.

இந்தத் தகவலை சீனாவின் தேசிய அணு உற்பத்தி நிலைய துணை தலைவர் குயூ ஜியாங்காக் பெய்ஜிங்கில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் தெரிவித்தார். இதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன.

இந்த அணு உலையும் இந்தியாவை ஒட்டியுள்ள பஞ்சாப் மாகாணத்தில் ஜாஷ்மா நகரில் நம்பர் 3, நம்பர் 4 என்ற பெயரில் கட்டப்படவுள்ளது. இங்கு 300 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இந்த இராட்சத அணு உலை அமைப்பதற்கான ஆலோசனையில் ஈடுபட்டவர்கள் யார் என்பதை தெரிவிக்க அவர் மறுத்து விட்டார். அமெரிக்காவும் இந்தியாவும் இந்த அணு உலை அமைக்கப்படுவதை விரும்பவில்லை. பாதுகாப்பு பிரச்சினை ஏற்படும் என கருதுகின்றன.

ஆனால்நீண்டகாலமாகமின்சாரத் தேவைக்காக பாகிஸ்தான் அவதியுற்று வருகிறது. அவற்றை நிவர்த்தி செய்யவே சீனா உதவி புரிகிறது என்றும் அவர் கூறினார். (ஶ்ரீ-2)

# முஷாரப் மீது பாகிஸ்தான் மக்கள் கடும் கோபம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் மீது அந்நாட்டு மக்கள் கடும் கோபம் கொண்டுள்ளனர். பாகிஸ்தானில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக நிதி திரட்டும் நிகழ்ச்சியை தொலைக்காட்சி நிறுவனம் நடத்தியது.

இந்நிகழ்ச்சியில் முஷாரப்புடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய மக்கள் பலரும் அவரை கடுமையாக விமர்சித்தனர். மிகுந்த கோபத்துடன் அவர் மீது தங்களுக்குள்ள ஆத்திரத்தை வார்த்தைகளால் கொட்டித் தீர்த்தனர். இருப்பினும் வெகு சிலர் மட்டும் முஷாரப்பின் இராணுவ ஆட்சியை புகழ்ந்ததோடு அதிபராக அவர் பதிவி வகித்த காலத்தில் சிறப்பாக ஆட்சி நடந்ததாகவும் தெரிவித்தனர்.முஷாரப் கடந்த ஆண்டு ஏப்ரலில் இருந்து வெளிநாட்டில் தங்கியுள்ளார். புதிய அரசியல் கட்சி மூலம் 2013 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# சீனாவின் கவர்ச்சி நகரமாக ஷாங்காய் நகரம் தெரிவு


(பீஜிங்)



சீனாவின் கவர்ச்சி நகரமாக ஷாங்காய் நகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சீனாவில் சமீபத்தில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வளம் , அழகான கட்டடங்கள் மற்றும் அழகான பெண்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் படி சீனாவின் வர்த்தக நகரமான ஷாங்காயில் தான் அதிகம் பேர் வசதி படைத்தவர்களாக உள்ளனர். அது மட்டுமல்லாது கவர்ச்சியான கட்டடங்களும் அழகான பெண்களும் இங்கு அதிகம் உள்ளனர்.

எனவே சீனாவின் முக்கியமான 30 நகரங்களில் ஷாங்காய் கவர்ச்சி நகரமாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கு அடுத்த படியாக ஹொங்கொங்கும் மூன்றாவதாக சோங்குங் நகரமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)



பிரான்ஸ் நாட்டின் முக்கிய பகுதியும் , உலக அதிசய சின்னமுமான ஈபிள் கோபுரத்திற்கு கடந்த திங்களன்று பயங்கரவாதிகள் மிரட்டல் விடுத்ததையடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# சந்திரன்-செவ்வாய் கிரகங்களுக்கு மனிதனை அனுப்ப சீனா திட்டம்

(பீஜிங்)

இந்தியாவுக்கு போட்டியாக சீனாவும் விண்வெளி பந்தயத்தில் குதிக்க உள்ளது. சீனாவின் சாங் (சந்திரனில் கால் பதிக்கும்) திட்டத்தின் தலைமை கமாண்டர் யெபெய் ஜியான் பீஜிங்கில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

பூமியில் இருந்து சந்திரனுக்கு மனிதனை அனுப்பி ஆராய்ச்சி செய்யும் திட்டம் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட உள்ளது. அதற்கு முன்னதாக 2013 ஆம் ஆண்டு செவ்வாய் கிரகத்துக்கும் 2015 ஆம் ஆண்டு வெள்ளி கிரகத்துக்கும் மனிதனை அனுப்ப உள்ளோம்.

இந்தத் தகவலை விண்வெளி விஞ்ஞானிகள் கூட்டத்தில் அவர் வெளியிட்டார். சந்திராயன்-1 திட்டத்தை இந்தியா அமுல்படுத்தியது. ஆளில்லாத விண்கலத்தை சந்திரனுக்கு அனுப்பியது.

அங்கு அது பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டது. சந்திரனின் மேற்பரப்பில் மோதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் அங்கு தண்ணீர் இருப்பது தெரிய வந்தது. இது உலக அளவில் இந்தியாவின் பெருமையை உயர்த்தியுள்ளது.

அத்துடன் இந்த நிலையில் சந்திராயன்-2 திட்டத்தை 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டில் ஜி.எஸ்.எல். வி.றொக்கெட் மூலம் இந்தியா அமுல்படுத்த உள்ளது. அதற்குப் போட்டியாகத் தான் சீனா மனிதனை அனுப்ப உள்ளதாக கருதப்படுகிறது. (ஶ்ரீ-2)

# வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணம் யசிந்தன் அதிரடி; சென்ரல் இறுதிக்குள்!

யாழ்.சென்ரல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 7-வது துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் 2-வது அரையிறுதிப் போட்டி கடந்த 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் யாழ்.சென்ரல் விளையாட்டுக் கழக அணி, ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை 64 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

யாழ்.சென்ரல் விளையாட்டுக் கழக அணி வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டித் தொடரில் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதற்தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.


முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்ரல் அணி 40.4 ஓவர்களில் சகல இலக்குகளையுமிழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ்.சென்ரல் அணி 6 இலக்குகளையிழந்து 90 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் யசிந்தன், சலிஸ்ரன் ஜோடி இணைப்பாட்டமாக 90 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலைக்குக் கொண்டு வந்தனர்.

யசிந்தன் 84, சலிஸ்ரன் 43, பாலேந்திரா 12 ஓட்டங்களைப் பெற்றனர். நாதன் 6 இலக்குகளையும் திலீபன், ஆதவன், வாமனன் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

204 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி 139 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.


இதில் சிவராஜா 21, நவயுகன் 23, வாமணன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். சுதர்சன் 3 இலக்குகளையும் சுபாதீஸ், யசிந்தன் தலா 2 இலக்குகளையும் ரஜீவ்குமார், சிவசங்கர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.



இப் போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.சென்ரல் விளையாட்டுக் கழக அணியும் யாழ்.பல்கலைக்கழக அணியும் இறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் யாழ்.பல்கலைக்கழக அணி இரண்டு தடவைகளும் யாழ். சென்ரல் அணி முதலாவது தடவையும் இறுதி போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழாப் பாமாலை



## மானுடம் காக்க

ஆடிக்களிக்கும் ஆனந்தன் நீயோ
ஆழியிலுறங்கும் ஆதவன் நீயோ
ஆடிக்கொடுத்தாள் மனம் உறைந்தாயோ
சுந்தர ராதைக்கும் சுகம்கொடுத்தாயோ
வீழ்வார் ஆணவம் விலக்கி வைத்தாயோ
ஆழ்வார் பாடலில் அகம் மகிழ்ந்தாயோ
ஏனினும் தாமதம் எமை நீ காக்க
எழுந்திடு விரைந்திடு மானுடம் காக்க

திருமதி எஸ்.பாக்கியநாதன்

## கண்ணன் இன்று தேரேறுகிறான்

கண்ணன் நல்ல கண்ணனாம்
கார் மேகக் கண்ணனாம்
கரிய நிறக் கண்ணனாம்
குறும்புக்கார கண்ணனாம்
வண்ணமான தேரிலே -இன்று
பவனிவரும் கண்ணனாம்

யோகராஜா மாதங்கி
கரவெட்டி.

## கவலைகள் தீர்வதற்காய் வந்தேன்

என்னடிமை தானென்று விஞ்சினம்
உன்னடிமை நானென்று சொல்கிறேன்
சுய நலம் கருதி வதைக்கினம்
பொதுநலமாய் உனை நான் வேண்டுகிறேன்

பிறப்பாலே உன்மேலே பாசம்
என் வாழ்வில் நிறைந்த சோகம்
அன்பாலே உனை நான் அணைக்கிறேன்
ஆனாலும் எனக்குள் ஏதோ கவலைகள்

வி.அகிலேஸ்வரன்
மருதங்கேணி.

# பொலிஸ் தலைமையகத்தின் ஏற்பாட்டில் போக்குவரத்து விழிப்புணர்வுக் கண்காட்சி

## பொலிஸ் அத்தியட்சகர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பொலிஸ் தலைமையகத்தின் ஏற்பாட்டில்வீதிப்போக்குவரத்து ஒழுங்குமுறை விழிப்புணர்வுக் கண்காட்சி எதிர்வரும்28ஆம்திகதி காலை 8.00 மணிமுதல்யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், பஸ் சாரதிகள், தனியார்போக்குவரத்து சேவை சாரதிகள், ஆட்டோ சாரதிகள் மற்றும் பொதுமக்களை தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின்பத்மதேவா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

பொலிஸ் தலைமையகத்தின் போக்குவரத்து பிரிவின் ஏற்பாட்டில் வீதிப் போக்குவரத்து ஒழுங்குமுறை விழிப்புணர்வுக் கண்காட்சி எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

சுமார் 30 வருடங்களின் பின் யாழ்ப்பாணத்தில் பொலிஸ் தலைமையகத்தினால் நடத்தப்படும் இக் கண் காட்சி மிகவும் பயன்மிக்கது.

எனவே இக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், பஸ் சாரதிகள், தனியார்போக்குவரத்துச்சேவை சாரதிகள், ஆட்டோ சாரதிகள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறவேண்டும்.

வீதியில் கண்காட்சியை மேற்கொள்வதற்கு போதிய வசதியின்மை காரணமாகவே நாம் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் இக்கண்காட்சியை நடத்துகின்றோம்.

குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து ஒழுங்குமுறைகள் தொடர்பிலும் பொது மக்கள் போக்குவரத்துச் சட்டங்கள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

அண்மைக்காலமாக யாழ். மாவட்டத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளமையால் பலர் மரணமடைந்து காயமடைந்து ஊனமாகியுள்ளனர்.

எனவேதான் பொலிஸாரின் கடமை என்ற வகையில் பொதுமக்கள் வீதிப்போக்குவரத்து ஒழுங்குமுறை தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு இக்கண்காட்சி ஏற்பாடு செய்துள்ளோம்.

இவ்வாறு யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்மதேவா தெரிவித்தார். (சி)

# இலங்கை அகதிகளின் ஆர்ப்பாட்டம் முடிவு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் தடுப்பு நிலையத்தின் கூரை மீதேறி இலங்கையர்களான 9 புகலிடக் கோரிக்கையாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் 29 மணித்தியாலங்களின் பின்னர் முடிவுக்கு வந்துள்ளது.

அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களம் தமது விண்ணப்பப் படிவங்களை மீள் பரிசீலனை செய்யாவிட்டால் கூரையிலிருந்து பாயப் போவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

ஐ.நாவின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கீழே இறங்கினர். (ச-5)

# மரக்காலைகளைப் பதிவு செய்ய யாழ்.வணிகர் கழகம் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல மரக்காலைகளும் பதிவு செய்து அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண வணிகர் கழகம் மேலும் தெரிவித்ததாவது,

மரக்காலைகளைப் பதிவுசெய்து அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான திணைக்கள அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறப்பது அல்லது நடமாடும் சேவையை விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

எனவே சகல விற்பனை நிலையங்களிலும் மரவேலை நிலையங்களிலும் உரிமையாளர்கள் தமது ஸ்தாபனத்தைப் பதிவு செய்வதற்கான ஆவணங்களைத் தயார்படுத்த வேண்டும்.

இவ்வாறு பதிவு செய்து அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலமே அண்மைக் காலமாகப் பொலிஸார் மேற்கொண்டுவரும் சட்ட நடவடிக்கைகளில் இருந்து விடுபட முடியும் என யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது.

இதேவேளை மரக்காலை பதிவு செய்து அனுமதிப் பத்திரத்தை வழங்கும் வனவளத் திணைக்கள வட மாகாணத்துக்குரிய அலுவலகம் தற்போது அநுராதபுரத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# மீள்குடியேற்றங்களை கண்காணிக்க...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாங்கள் ஜனாதிபதியோடு சந்தித்த வேளையிலேயே இரண்டு விடயங்கள் சம்பந்தமாகத் தொடர்ந்து எங்களுடைய ஈடுபாடு இருக்கும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஒன்று அரசியல் தீர்வு சம்பந்தமானது. மற்றையது மீள்குடியேற்றம். மீள்குடியேற்றத்தை கையாள்வதற்கென்று எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களைக் கேட்டிருந்தார்கள்.

அதற்கு நாங்கள் எங்களின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைச் சிபார்சு செய்திருந்தோம்.

அது கிடைத்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் தற்போது எங்களுக்கு அறிவித்திருக்கின்றது. அந்த 7 பேரில் கட்சி நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், பொதுச் செயலாளர் மாவை.சேனாதிராஜா, மூத்த உறுப்பினர்கள் சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், பொன்.செல்வராசா,

அத்தோடு நான், நாடாளுமன்ற உறுப்பினர் பசீரதன் என்ற அந்த 7 பேர் கொண்ட குழுவிலே அடங்கியிருக்கின்றோம்.

ஜனாதிபதி எங்களை மீள்குடியேற்றத்தில் அதை மேற்பார்வை செய்வதற்கு ஒரு ஒழுங்கைக் கட்டி அமைப்பார் என்று எதிர்பார்க்கின்றோம்.

அதில் நாங்கள் ஈடுபடுத்துவதற்குத் தயாராக இருக்கின்றோம். இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் 13-வது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு அப்பாலான தீர்வு ஒன்று குறித்து அரசாங்கம் பேச முன்வர வேண்டுமானால் இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

அரசாங்கம் எங்களுடன் அதைப் பற்றிக் கேட்டால் நாங்கள் அது குறித்துப் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம். 13-வது திருத்தச் சட்டத்தில் இருக்கின்ற குறைபாடுகள் எங்களுக்குத் தெரியும். அது குறித்து ஆராய்ந்தால் அதிலே என்ன குறைபாடு இருக்கின்றது. எப்படி அதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று சொல்வதற்கு எங்களுக்கு ஒரு எண்ணம் இருக்கின்றது என்றார். (ச-3)

# புலிகளின் தடையை...

மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். மூவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதவான்கள் இந்த மனு மீதான விசாரணைகளை நடத்தினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்கான நியாயங்களை முன்வைத்து வாதாடுவதற்கு தமக்கு அனுமதிக்குமாறு நீதவான் விக்கிரமஜிட் சென்னிடம் வை.கோ கோரிக்கை விடுத்துள்ளார். எனினும் இந்தக் கோரிக்கையை நீதவான் நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

கடந்த மே மாதம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான தடையை இந்திய மத்திய அரசாங்கம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கையில் தோற்கடிக்கப்பட்ட போதிலும்இந்தியாவில் சில முக்கிய உறுப்பினர்கள் மீள இயங்குவதற்கான முனைப்புக்களை மேற்கொண்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழகத்தை விடுதலைப்புலிகள் களமாகப் பயன் படுத்திக் கொள்ளக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக உள்துறையமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

விடுதலைப்புலிகள்ஆதரவாளர்களினால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் நிலவிவருவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக இணையத்தைப் பயன் படுத்தி இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களை சில புலி ஆதரவாளர்கள் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளது.

வை.கோ.வின் மனு தொடர்பான விசாரணை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# பொதிகளில் உள்ள...

கொண்டனர். அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நிர்வாகத்தினர், யாழ். மாவட்டத்தில் சகல நுகர்வுப்பொருட்களும் அதில் பொறிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட வேண்டும்.

மாறாக பொருட்களில் பொறிக்கப்பட்ட விலைக்கு மேலாக பிரத்தியேகமாக புதிய விலை ஒட்டப்பட்டு விற்பனைசெய்வது குற்றத்துக்குரியது.

இதே நடைமுறையை மருந்தகங்களும் கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன் சகல வர்த்தக நிலையங்களிலும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

இதில் விஷேட தரங்கள் உரிய பொருட்களின் பெயர்களை (உதாரணமாக- பொன்னி சம்பா) குறிப்பிட்ட விலைகள் காட்சிப்படுத்த வேண்டும்.

குறிப்பாக குளிர்பானங்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் குளிர் பானத்தில் பொறிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க அல்லது கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க அதிக விலையில் விற்பனை செய்யக் கூடாது.

எனினும் தற்போது வர்த்தகர்கள் சாதாரண குளிர்பானங்களை கட்டுப்பாட்டு விலைகளிலும் குளிரூட்டப்பட்ட குளிர்பானங்களை அதிக விலையிலும் விற்பனை செய்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க குளிர்பானங்களை அதிக விலையில் விற்பனை செய்யப்படலாகாது. இதற்காக குளிர்பானங்களை விநியோகிக்கும் நிறுவனங்கள் குளிர் பானங்களுக்கு குளிரூட்டும் செலவுக்கான பெறுமதிக்கு கழிவு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுப்போம்.

**தரமான பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும்**

யாழ்ப்பாண வர்த்தகர்கள் தர நிர்ணயமுடைய நுகர்வுப் பொருட்களையே கொள்வனவு செய்து விற்பனை செய்யவேண்டும்.

குறிப்பாகதரநிர்ணயமின்மையால்தென்னிலங்கையில் தடை செய்யப்பட்ட பொருட்களை (உதாரணமாக- சொப்பின் பை) கொள்வனவு செய்து விற்பனை செய்வது குற்றத்துக்குரியது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே பாவனையாளர் அதிகார சபையின் சட்டத்தினால் ஏற்படும் நெருக்கடிகளையும் சட்ட நடவடிக்கைகளையும் தவிர்க்கும் வகையிலேயே மேற்கண்ட நடைமுறைகளை பின்பற்றுமாறு வர்த்தகர்களை கேட்டுக் கொள்கிறோம் என யாழ்ப்பாண வணிகர்கழக நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ச-5)

# முறிகண்டி...

பாதையுடன் இணைக்கப்படவில்லை எனவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகளை அமைப்பதற்கென இந்திய அரசினால் வழங்கப்பட்ட வீடுகளே இவ் வீட்டுத் திட்டத்துக்கு பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்பட்டது. (எ-1)

# கிளி., முல்லை...

இந் நிலையில் விசாரணைக் குழுவினர் தமது அறிக்கைகளை தயார் செய்துள்ளதாகவும் ஐ.நா. கூட்டத்தொடரில் கலந்து கொள்ளச் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதும் அறிக்கைளை கையளிப்பர் எனவும் கூறப்பட்டது.

இதேவேளை ஒவ்வொரு மாவட்டங்களிலும் இடம்பெற்ற விசாரணை அறிக்கைகளை தனித்தனியே சமர்ப்பிக்கும் இக் குழுவினர் அனைத்தையும் ஒன்றிணைத்து இறுதி அறிக்கை ஒன்றை தயாரிப்பர் எனவும் அது ஊடகங்களுக்கும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-1)


IELTS
Spoken English
ஆரம்பமாகிறது

ENGLISH TIME
LANGUAGE SCHOOLS & OVERSEAS EDUCATION

❁ குறைந்த கட்டணம்
❁ பல்கலைக்கழக விரிவுரையாளர்களை ஆசிரியர்களாகக் கொண்ட
❁ பல திறமைமிகு மாணவர்களை உருவாக்கி தந்த

European College of higher Studies
315 1/2, Parameshwara Junction,
Palaly Road,Jaffna.

01.10.2010 ஆரம்பமாகிறது.
முதல் அனுமதி பெறும் 10 மாணவர்களுக்கு அனுமதி இலவசம்.

Tel.No.:0711841084, 0213734747, 0771882507 (2521)



A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கற்கைநெறிகள்
Advanced Dip. in Video mixing
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→09வரை)
Group Classes

CBCA

கே.கே.எஸ் வீதி
உப்புமடம் சந்தி
அருகாமையில்

CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 19 . 05 . 1934

உதிர்வு 22 . 09 . 2007

**திருமதி பிலிப்பையா பெர்ணபேத்தம்மா**
**(வெற்றிலைக்கேணி)**

எம் இதயங்கள் பூரிப்படைந்து
வழிகள் இறைவனை தேடுதம்மாநாம் அம்மா என்றழைக்க உம்மை எமக்கு அருளிய
மூன்றாண்டு சென்றாலும் முடியவில்லை
உம்மை மறக்க எம்மால்
'நீ இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்
என்று உறுதியாக உமக்கு சொல்லுகின்றேன்' (லூக் : 23:43)
'உலகின் ஒளி நானே என்னைப் பின்தொடர்பவர்
இருளில் நடக்கமாட்டார் : வாழ்வுக்கு வழிகாட்டும்
ஒளியைக் கொண்டிருப்பார்' (யோவான் 8:12)
'வழியும் உண்மையும் வாழ்வும் நானே என் வழியாய் அன்றி
எவரும் தந்தையிடம் வருவதில்லை' (யோவா : 14:6)
இயேசு சொன்னது எம் காதோரம் ரீங்காரமிடுக்கின்றதம்மா.

எம் வாழ்வினை வசந்தமாக்கி
எம் அனைவரையும் வளமாக்கி
அதனை வானத்து நட்சத்திரமாக்கி
இருந்து பார்த்து மகிழ்வடையும்
எம் இனிய அன்னையே!
ஆண்டுகள் மூன்று
அகன்றாலும் – உம்
அரவணைப்பில் வாழ்ந்த நாட்களை எண்ணி
ஆண்டவருக்கு நன்றி சொல்லுகிறோமம்மா
வருடங்கள் போனாலும் வாடிவிடாது
உமது இனிய நினைவுகள்...
உம் ஆன்மா நித்திய வான்வீட்டில் இளைப்பாற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்.
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் (2519)


European College of higher Studies

மாணவர்களின் நலன் கருதிய சேவையின் ஒரு மைல்கல்லாக லண்டனில் ஆங்கிலமும் அதனூடான துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் IELTS அவசியமற்ற புதிய விசா நடைமுறையைகொண்டு வருகின்றனர்.

இன்னும் லண்டனில்
பிரதான கல்லூரிகளான





❁ Bickenhall College of computing
❁ Union College
❁ London Richmond College
❁ London Victoria College
❁ Thames College of Technology
❁ Interlink College

என்பவற்றுடன் இணைந்து 2 1/2 வருடத்துக்கு குறையாமல் Sponsor வசதியுடன் விசாக்களை பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

European College of higher Studies
315 1/2, Parameshwara Junction,
Palaly Road,Jaffna.
Tel.No.:0711841084, 0213734747, 0771882507 (2520)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.